விலை ரூபா: 10.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆடி 05 வெள்ளிக்கிழமை (21.07.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 214

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## யாழ்ப்பாணத்தில் நேற்று நால்வர் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று மட்டும் வெவ்வேறு சூட்டுச் சம்பவங்களில் நால்வர் உயிரிழந்தனர்.

### இணுவிலில்...

இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக சிகை அலங்கார நிலையம் நடத்திவந்தவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். நேற்றுக் காலை 7.30 மணியளவில் அவரது கடைக்குள் வைத்து இனந்தெரியாதோரால் அவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இளவாலையை வசிப்பிடமாகக் கொண்ட நடராசா ரவீந்திரகுமார் (வயது 29) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார். அவரது கடைக்கு அண்மையில் இராணுவக் காவலரண் ஒன்று இருப்பது குறிப்பிடத்தக்கது.

இவரது சடலம் யாழ்.போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதே வேளை சம்பவ இடத்தைப் பார்வையிட்ட மல்லாகம் நீதிவான் சறோஜினி இளங்கோவன் பின்னர் யாழ்.போதனாவைத்தியசாலைக்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டதுடன் பிரேதபரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டார்.

### ஆனந்தபுரத்தில்...

இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த இனந்தெரியாத நான்கு பேர்கொண்ட குழுவொன்றினால் புதுச்செம்மணி வீதி ஆனந்தபுரத்தில் வசிக்கும் இளைஞன் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்றுக் காலை 6 மணிக்கு இடம் பெற்றுள்ளது. உயிரிழந்தவர் கிட்ணபிள்ளை ஸ்ரீகிருஸ்ணா (வயது 25) என்ற இளைஞன் ஆவார்.

கூலித்தொழிலாளியான இவர் அவரது வீட்டிற்கு அண்மையில் கோவிலுக்கு அருகில் வைத்து சுடப்பட்டுள்ளார். தலையிலும் நெஞ்சுப் பகுதியிலும் சூட்டுக்காயங்களுக்கு இலக்காகியுள்ள இவரது சடலத்திற்கு அருகில் கைத்துப்பாக்கிக் குண்டின் மூன்று வெற்றுத் கோதுகள் காணப்பட்டதாக தெரிகிறது.

சம்பவம் நடந்த இடத்தில் சடலத்தைப் பார்வையிட்ட யாழ்.மாவட்ட மேலதிக நீதிபதி சிறிநிதிநந்த சேகரன் சடலத்தை பிரேதபரிசோதனைக்காக யாழ்.போதனா (10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். இளைஞன் கொழும்பில் கொலை

கொழும்பில் தமிழ் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். கொழும்பு 13 கொட்டகேனப் பகுதியிலேயே இவர் சுடப்பட்டுள்ளார்.

நேற்றிரவு கொட்டகேனப் பகுதியில் உள்ள வணிக நிலையத்தினுள் உள்நுழைந்த தாக்குதலாளிகள் அவரைச் சுட்டுவிட்டுச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரான்லி வீதியில் தடைகள்அமைப்பு

வெலிங்டன் சந்தியில் இராணுவத்தினரால் புதிதாக வீதித்தடை போடப்பட்டுள்ளது. மணிக்கூட்டு வீதியிலும், ஸ்ரான்லிவீதியில் வின்சர் சந்தியிலும் இவ் வீதித்தடைபோடப்பட்டுள்ளது.

இவ் வீதித்தடையால் வாகனப்போக்குவரத்துக்கு பாரிய இடையூறு ஏற்பட்டுள்ளது. இவ்வீதியில் வர்த்தக நிலையங்கள் அதிகமாக காணப்படுவதால் வாகனப்போக்குவரத்துக்கு பாரிய இடையூறு ஏற்படுவதாக அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ச-133)


# இலங்கைப்பிரச்சினையை தீர்க்க பிரதான கட்சிகள் இணைய வேண்டும்

## இந்தியா வலியுறுத்தல்

(புதுடில்லி)

இலங்கையில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முக்கிய பிரதான கட்சிகள் இரண்டும் ஒன்றிணைய வேண்டுமென இந்தியா வலியுறுத்தியுள்ளது.

மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு இந்தியா சென்ற எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் இந்திய வெளியுறவுத்துறை இணையமைச்சர் ஜி.அஹமது இதனைத் தெரிவித்தார். (10 ஆம் பக்கம் பார்க்க)



## மன்னார்- வவுனியாவில் கிளைமோர்த் தாக்குதல்

### அறுவர் படுகாயம்

(மன்னார்)

மன்னார் கொக்குப்படையானில் இராணுவத்தினரது ஆழ ஊடுருவும் அணியினரால் நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் நியாப் திட்ட அதிகாரிகள் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

கொக்குப்படையானுக்கும் கல்லாறுக்கும் இடையே சிலாபத்துறை-முள்ளிக்குளம் வீதியில் நேற்றுப் பிற்பகல் 2.45 மணியளவில் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஒரு பெண் அதிகாரி உட்பட மூன்று நியாப் திட்ட அதிகாரிகளும் (10 ஆம் பக்கம் பார்க்க)

## 524-வது பிரிகேட் தலைமையகத்தில் நேற்று குண்டு எச்சரிக்கை விடுப்பு!

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையில் அமைந்துள்ள சிறிலங்கா இராணுவத்தின் 524 பிரிகேட் படையணியின் தலைமை அலுவலகத்தில் குண்டு வெடிப்பதாக வந்த அநாமதேய தொலைபேசி அழைப்பையடுத்து படையினர் மத்தியில் பெரும் பதற்றமும் பீதியும் நிலவியதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நேற்றுக் காலை வந்த அநாமதேயத் தொலைபேசி அழைப்பில் சரளமாகச் சிங்களத்தில் பேசிய நபர் ஒரு சில நிமிடங்களில் குண்டு வெடிக்கப்போவதாகக்கூறி வெடிகுண்டு எச்சரிக்கையை விடுத்துள்ளார். எனினும் பின்னர் அச் செய்தி பொய்யெனத் தெரியவந்தது. இவ் அநாமதேயத் தொலை பேசித்தகவல் குறித்து விசாரணைகளை படையினர் மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## குருநகரில் இளைஞன் ஒருவர் இராணுவத்தினரின் சூட்டுக்குப் பலி

### நேற்றிரவு சம்பவம்


(யாழ்ப்பாணம்)

குருநகர் பகுதியில் இளைஞன் ஒருவர் இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். நேற்றிரவு 7.45 மணியளவில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

நேற்றிரவு மின்சாரம் தடைப்பட்டபோது தமது முகாமிற்கு கிரனைட்தாக்குதல் நடத்த பிரஸ்தாப இளைஞன் முற்பட்டதாகவும் இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அவர் (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜிடேன்-மற்ரஸி மோதல் தீர்ப்பு

# ஜிடேன் மூன்று; மற்ரஸி இரண்டு போட்டிகளில் விளையாடத் தடை






பிரான்ஸ் உதைபந்தாட்ட அணியின் தலைவர் ஜிடேனுக்கு மூன்று போட்டிகளில் விளையாடத் தடையும் இத்தாலி வீரர் மற்ரஸிக்கு இரண்டு போட்டிகளில் விளையா டுவதற்கான தடையும் பீபா விசாரணைக்குழு விதித்துள்ளது.

அண்மையில் ஜேர்மனியில் நடைபெற்று முடிந்த 18-வது பீபா உலகக் கிண்ணஉதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் மேலதிக நேரத்தில் பிரான்ஸ் அணித் தலைவர் ஜிடேன் எதிரணியான இத்தாலி வீரர் மற்ரஸியை தலையால் நெஞ்சில் முட்டி கீழே வீழ்த்தினார்.

இந்த சம்பவம் தொடர்பாக நேற்று சூரிச்சில் ஜிடேனிடம் விசாரணைகளை மேற் கொண்ட பீபாவினால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு ஜிடேனுக்கு உலகக் கிண்ண மூன்று போட்டிகளில் விளையாடுவதற்கான தடையும் 6 ஆயிரம் அமெரிக்க டெலர்களை உலக உதைபந்தாட்ட சம்மேளனத்திற்கு அபராதமாக வழங்க வேண்டும் எனவும் மற்ரஸிக்கு இரண்டு உலகக் கிண்ணப் போட்டிகளில் வில்ளயாடுவதற்காக தடையுடன் 4 ஆயிரம் அமெரிக்க டொலர்களை உதைபந்தாட்ட சம்மேளனத்திற்கு அபராதமாக வழங்க வேண்டும் என்றும் உத்தர விடப்பட்டுள்ளது. எனினும் ஜிடேன் உலகக் கிண்ணப் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றமையால் உள்ளூர் போட்டிகளில் விளையாடுவதற்கான தடையை பீபா விதித்துள்ளது.

மற்ரஸி தனது தாயாரையும் சகோதரியையும் விபச்சாரி என கூறியதனாலேயேதான் அவரை அவ்வாறு முட்டி வீழ்த்தியதாக ஜிடேன் தெரிவித்தார். எனினும் இதனை மறுத்து பீபா விசாரணைக்குழுவிற்கு வர்க்கு மூலமாக மற்ரஸி தெரிவித்திருந்தார்.

இதேவேளை சூரிஸில் நேற்று 5 பேர் கொண்ட பீபா விசாரணைக்குழுவிற்கு முன் 90 நிமிடங்கள் விசாரணையில் ஜிடேன் மேற்படி சம்பவத்தை எழுத்து மூலமர்க தனது விளக்கத்தை வழங்கினார்.



அமெரிக்காவில் நடக்கும் சின்சினாட்டி ஓபன் டென்னிஸ் போட்டியின் 2வது சுற்றுக்கு சானியா முன்னேறினார். அவர் முதல் சுற்றில் அமெரிக்காவின் அலெக்சாண்ட்ரா ஸ்டீவன்சனை வீழ்த்தினார். சானியா 6-1, 2-0 என முன்னிலை வகித்தபோது ஸ்டீவன்சன் காயம் காரணமாக விலகினார்.

# சீனாவில் பிரபலமாகும் கிரிக்கெட் ஆட்டம்

உதைபந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், டெனிஸ் போன்ற ஆட்டங்கள் உலக அளவில் பரவியுள்ளன. ஆனால் கிரிக்கெட் போட்டியை பொறுத்தவரையில் குறிப்பிட்ட சில நாடுகளில் மட்டுமே ஆடப்படுகிறது.

அதிலும் இலங்கை, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து,பாகிஸ்தான் , இந்தியா போன்ற ஒரு சில நாடுகளில் மட்டுமே கிரிக்கெட் போட்டி கொடிகட்டி பறக்கிறது.

ஆனால் மற்ற நாடுகள் கிரிக்கெட் போட்டியை கண்டு கொள்வதே இல்லை. குறிப்பாக அமெரிக்கா,யப்பான், சீனா போன்ற நாடுகள் கிரிக்கெட்டை ஒரு விளையாட்டாகவே கருதாமல் இருந்து வந்தன.

ஆனால் தற்போது இந்நிலை மாறி வருகிறது. கிரிக்கெட் ஆட்டம் மற்ற நாடுகளிலும் பரவிவருகிறது. குறிப்பாக சீனாவில் கிரிக்கெட் போட்டியின்மீது மோகம் அதிகரித்து வருகிறது. 1858-ம் ஆண்டு முதன் முதலாக கிரிக்கெட் போட்டி நடந்தது.

அப்போது கிரிக்கெட் ஆட்டம் மக்களை அவ்வளவாக சென்றடையவில்லை. எனவே கிரிக்கெட் போட்டி சீனாவில் காணாமல் போனது. ஆனால் தற்போது சமீபகாலமாக சீனாவில் கிரிக்கெட்டுக்கு மவுசு அதிகரித்ததினால் ரசிகர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது.

கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு அங்கு தேசிய கிரிக்கெட் சபை ஆரம்பிக்கப்பட்டு உள்நாட்டு போட்டிகள் நடை பெற்று வருகின்றன. எனவே விரைவில் சீனாவிலும் வலுவான கிரிக்கெட் அணியை எதிர்பார்க்க லாம்.

அதன் ஒரு பகுதியாக 2010-ல் அங்கு நடக்கும் ஆசிய விளையாட்டு போட்டியில் கிரிக்கெட்டை இடம் பெறச் செய்யவும் சீனா கிரிக்கெட் சபை முயற்சித்து வருகிறது.

# உதைபந்தாட்டப் போட்டியில் பார்வை இழந்த சீன வீரர்

(பிஜிங்)


சீனாவில் கினியா உதைபந்தாட்ட அணியில் நட்சத்திர வீரர் அவுஸ்மானே பங்குரா, போட்டியின் போது ஏற்பட்ட மோதலில் பார்வையிழந்துள்ளார்.

கினியா உதைபந்தாட்ட அணியின் நட்சத்திரவீரர் அவுஸ்மானே பங்குரா அந்த அணிக்காக பல ஆண்டு காலமாக விளையாடி வருகின்றார்.

சில வாரங்களுக்கு முன்பு சீனா சுப்பர் லீக் போட்டியில் குங்டோ ஜங்செங், கினியா இன்டர்நேசனல் அணிகள் மோதின. இப் போட்டியின்போது குங்டோ அணியின் லுகாங் காலால் அவுஸ்மானே முகத்தில் ஓங்கி எத்தினார். அதில் அவரது கண் பாதிக்கப்படவே, அவுஸ்மானே உடனடியாக சுருண்டு விழுந்தார். அவர் சென்யாங் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.


அங்கு அவருக்கு சத்திரகிச்சை நடந்தது. இதில் எதிர்பார்த்த அளவு முன்னேற்றம் ஏற்படாததால் அவர் பீஜிங்கிலுள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இரண்டாவது முறையாக அவுஸ்மானே கண்ணில் சத்திர சிகிச்சை செய்த மருத்துவர்கள் அவரது பார்வை திரும்பாது என கைவிரித்து விட்டனர்.



எதிர்வரும் 27 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இலங்கை - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருக்கான கிண்ணத்தை அறிமுகப் படுத்தும் நிகழ்வில் நேற்று இலங்கை அணித் தலைவர் மகேல ஜெயவர்த்தனவும் தென்னாபிரிக்கக் அணித் தலைவர் பிறின்ஸும் கைலாகு கொடுக்கும் காட்சி...

# இலங்கை முத்தரப்பு ஒருநாள் தொடர் இந்திய அணியில் டெண்டுல்கர்; மொங்கியா



(டில்லி)

இலங்கையில் நடைபெறவுள்ள இந்தியா, இலங்கை, தென்னாபிரிக்க கிரிக்கெட் அணிகள் பங்குபற்றும் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றும் 15 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

தோள்பட்டை காயம் காரணமாக விலகியிருந்த சச்சின் டென்டுல்கருக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல் உள்ளூர் கிரிக்கெட்டில் சிறப்பாக ஆடிவரும் டினேஷ் மொங்கியாவுக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த அனில் கும்ளே அணியில் இடம் பெறவில்லை. அணி விபரம் வருமாறு;

ராகுல் டிராவிட் (அணித் தலைவர்), சச்சின் டெண்டுல்கர், சேவாக், யுவராஜ் சிங், டோனி, சிறிசாந்த், கைவ், அஜித் அகாக்கர், ரமேஸ் பவார், ரெய்னா, பதான், முனாப் படேல், தினேஷ், மொங்கியா, ஆர்.பி.சிங், ஹர்ப்பஜ சிங்.







இலங்கைக்கு சுற்றுப்பயணம் வந்துள்ள தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் வீரர்கள் எதிர்வரும் 27 ஆம் திகதி இலங்கையுடன் ஆரம்பமாகவுள்ள டெஸ்ட் போட்டியில் விளையாடுவதற்காக கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் பயிற்சியில் ஈடுபடும்போது...

# அனைத்து தடைகளையும் வென்று எமக்கான தேசத்தை அமைப்போம் - க.வே.பாலகுமாரன்

(கொழும்பு)

பளைக்கோட்ட மக்கள் படைக் கட்டுமான உள்ளகப்பாதுகாப்பு படையணியின் பயிற்சி நிறைவு நிகழ்வு நேற்று முன்தினம் பளை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுள்ளது.

1500 கு மேற்பட்ட பயிற்சியாளர்கள் பன்ட் வாத்திய அணி வகுப்புடன் அழைத்துவரப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமானது. இந்நிகழ்வின் பொதுச்சுடரினை மாவீரர் லெப் கேணல் சங்கரின் தாயார் ஏற்றிவைக்க தமிழீழ தேசியக் கொடியினை தேசியத் துணைப் படைத்தளபதி அல்பிரேட் ஏற்றி வைத்தார். தொடர்ந்து மலர் வணக்கம் இடம்பெற்றது.


இந்நிகழ்வில் சிறப்புரையினை விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன், புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் நா.தமிழன்பன் ஆகியோர் நிகழ்த்தினர். க.வே.பாலகுமாரன் தனதுரையில்...

எங்களுடைய இழந்துபோன வாழ்க்கையினை மீட்பதற்காக நாங்கள் சிங்கள இனவாதிகளுக்கெதிராக போராடிவருகின்றோம். சிங்கள அரசிற்கு யுத்தகாலத்தில் சர்வதேசம் செய்த உதவிகளை நாம் அறிவோம். நாம் துயர் சிந்தியபோது உயிரையும் உடலையும் பணையம் வைத்து போராடி எம் நிலங்களை மீட்டு நிமிர்ந்த போது அமைதி சமாதானம் என்று சர்வதேசம் எங்கள் மீது அக்கறை காட்டியது, இதனால் சர்வதேசத்தின் பல்வேறு விதமான கேள்விகளுக்கும்பதில் கூறவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

அதனால் தான் தலைவர் அசாத்தியமான பொறுமையோடு சர்வதேசத்தின் தடைகளை தாண்டுவதற்காக சிறிலங்கா அரசு எம் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டுள்ள கோழைத்தனமான தாக்குதல்களையெல்லாம் பொறுமையுடன் பார்த்துவருகிறோம்.

நாங்கள் இதுவரை நல்ல முறையில்பண்பான முறையில் சொல்லிய கருத்தை ஏற்க மறுத்த சிங்களமும் அதற்கு வால் பிடித்த வல்லரசுகளும் மறுத்து வந்துள்ளன. காலப்போக்கில் உங்கள் சார்பாக அனைத்து தடைகளையும் நாங்கள் வென்றெடுத்து எமக்கான ஒரு தேசத்தை அமைப்பதற்கு அனைவரும்போராடவேண்டுமென அவர் தெரிவித்தார்.

இப் பயிச்சியின் போது நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கானபரிசில்களும்வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். (அ)



ஆனந்தபுரத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட கூலித்தொழிலாளி கிட்ண பிள்ளை சிறி கிருஷ்ணாவின் சடலத்தின் அருகில் உறவினர் சூழலிருந்து அழுதுபுலம்புவதையும், சுடப்பட்ட குண்டின் வெற்றுத் தோட்டாக்களையும் படங்களில் காணலாம்.

(படம்:- திலீவின்பன்)

# பல்கலைக்கழகக் கல்வியில் மஹிந்த சிந்தனை

நாட்டில் வாழும் சகல மக்களும் சமமான கல்வியைப் பெறவேண்டும் என்ற மஹிந்த சிந்தனையின் கீழ் இன்னும் மூன்று வருடகாலத்திற்கு பல்கலைக்கழக அனு மதிக்கு விண்ணப்பிக்கும் சகல மாணவர்களுக்கும்சமசந்தர்ப்பங்களைவழங்கக் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துவருவதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த தெரிவித்தார்.

கண்டி தர்மராஜா கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு பேசுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், பல்வேறு பட்ட கஷ்டங்களின் மத்தியில் பல்கலைக்கழகம்செல்லவேண்டுமென மிகவும் ஆர்வத்துடனும் ஆசையுடனும் கல்வி கற்கும் மாணவர்கள் ஓரிரு புள்ளிகளினால் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பை இழக்கின்றனர். அதற்காக அவர்களுக்குத் தகுதி இல்லை யெனக் கூற முடியாது. ஓரிரு புள்ளி களினால் பல்கலைக்கழகம் செல்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்காதமாணவர்களுள் பலர் விரக்திமனப்பான்மையுடன் தமது கல்வியை மேலும் தொடராமல் விட்டு விடுகிறார்கள்.

அதனால் எதிர்காலத்தில் சிறந்ததொரு கல்வியல் சமுகத்தை நாட்டில் கட்டியெழுப்ப வேண்டுமென்ற ஜனாதிபதியின் ஆலோசனையை பிரதிபலிக்கும் வகையில் இந்நடவடிக்கையை நாம் மேற் கொண்டு வருகின்றோம்.

கடந்த ஆண்டைவிட இவ்வருடம் 2400 மாணவர்களை மேலதிகமாக பல் கலைக்கழகத்திற்கு சேர்ந்துள்ளோம். மொத்தமாக 7400 மாணவர்கள் இறுதி வருடத்தில் பல்கலைக்கழகத்திற்கு உள்வாங்கப்பட்டுள்ளனர்என்றார். (து-7)

# சிறு தொழில் முயற்சியாளர்களுக்கு நிதியுதவி கொழும்பு மனித நேய அமைப்பு உதவி

(தென்மராட்சி)

கொழும்பிலுள்ள மனிநேய அமைப்புக்களின் நிதியுதவியுடன் அறவழிப் போராட்டக்குழு தென்மராட்சிபிரதேசத்தில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட சிறு தொழில் முயற்சியாளர்களின் தொழில்களை மேம்படுத்துவதற்கான நிதியுதவியை வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், மரக்கறி விற்பனையாரளர்கள், சைக்கிள் திருத்துபவர்கள், பலகார உற்பத்தியாளர்கள், ஆடு, மாடு வளர்ப்போர், சலவைத் தொழிலகம்; பலசரக்குக் கடை நடாத்துவோர் என 24 பேருக்கு முதற்கட்ட நிதியாக தலா ரூபா 4000 வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் மேலும் நான்காயிரம் ரூபா இருகட்டங்களாக வழங்கப்படும் எனத் தெரிய வருகின்றது. (து-6)

# இராசி பலன்

**21.07.2006**
**(ஆடி 5, வெள்ளிக்கிழமை)**
**ஏகாதசி முற்பகல்10.58 மணிவரை**
**ரோகினி முன்னிரவு 11.53 மணிவரை**
**இராகுகாலம் 10.31-12.01மணிவரை**
**சுபநேரம் 6.01-7.31 மணிவரை**
**ஏகாதசி விரதம்**

| | |
|---|---|
| மேடம் | உணர்ச்சி வசப்படல், காரியதாமதம், விவாகம், பொருள் விரயம். |
| இடபம் | சிந்தனை மிகுதி, தெய்வதரிசனம், முயற்சி கைகூடும், நண்பர்கள் சந்திப்பு. |
| மிதுனம் | பிரயாணம், காரிய அலைச்சல், சயனசுகக் குறைவு, சுபசெலவு. |
| கடகம் | குடும்ப மகிழ்ச்சி, தெய்வசிந்தை, காரிய அனு கூலம், பொருள் சேர்க்கை. |
| சிங்கம் | கடின உழைப்பு, தூரதேசச்செய்தி; அதிகாரம், தேகநலன். |
| கன்னி | பிதாசிந்தை, முயற்சி தாமதம், பிரயாணம், பெரியோர் உதவி. |
| துலாம் | உடல்நலக்குறைவு, அபகீர்த்தி, வேலைச்சுமை, முயற்சி தாமதம். |
| விருச்சிகம் | களஸ்திர நன்மை, தெய்வதரிசனம், காரிய நன்மை, பணவருவாய். |
| தனுசு | ஆரோக்கியம், எடுத்த காரியம் கைகூடும், செய்தொழில் விருத்தி, நல்ல செய்தி. |
| மகரம் | புத்திரரால் கவலை, வேலைச்சுமை, முயற்சி கைகூடும், பணக்குறைவு. |
| கும்பம் | தாய்வழி உறவு, எடுத்த காரியம்கைகூடும், பணவிரயம், அமைதிக்குறைவு, |
| மீனம் | அன்னியர் சந்திப்பு, வாக்குமேன்மை, போசனசுகம், தெய்வசிந்தை. |

- வளவன்

# ஆன்மீகச் சொற்பொழிவு

(மருதங்கேணி)

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடாத்திவரும் ஆன்மீக சொற்பொழிவு தொடரில் இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் 'பெரியபுராண' தொடர் சொற்பொழிவினை சிரேஷ்ட விரிவுரையாளர் சு.குமாரவேல் சொற்பொழிவாற்றுவார். (அ-35)

* * *

(மருதங்கேணி)

புலோலி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக சொற்பொழிவு தொடரில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி பூசை முடிவுற்றதும் 'பாரதத்தில் கண்ணன்' என்றும் விடயம் பற்றி இன்னிசை செல்வர் க.ஆ.அன்னதாசன் ஆன்மீக சொற்பொழிவாற்றுவார். (அ-35)

# விடுமுறை

எதிர்வரும் 24ஆம் திகதி திங்கட்கிழமை ஆடி அமாவாசைத் தினத்தன்று சகல வர்த்தக நிலையங்களையும் பூட்டி வர்த்தக ஊழியர்கள் ஆடி அமாவாசைக் கடமைகளைச் செய்வதற்கு விடுமுறை வழங்க வேண்டுமென யாழ்.வணிகர் கழகம் கேட்டுக்கொண்டுள்ளது. (அ)

# குருத்துவத் திருநிலைப் படுத்தல்

(சில்லாலை)

யாழ்.புனித மரியன்னை பேராலயத்தில் எதிர்வரும் 26ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு அமலமரித்தியாகிகள் சபையைச்சேர்ந்த நான்குபேர் குருக்களாக, யாழ்.ஆயர் பேரருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் திருநிலைப்படுத்தப்படவுள்ளனர்.

மாலீசன் கூடல் இளவாலையைச் சேர்ந்த பேரின்பநாயகம் பெனிக்னஸ், யா.ஊ கொழும்பைச் சேர்ந்த செல்லத்துரை பிரவீன் மகேசன், பெரியவிளான் இளவாலையைச் சேர்ந்த யோன்சாமிநாதர் றெனி பீஷ்மன், திருகோண மலையைச் சேர்ந்த அல்பிரட் விஜயகமலன், அல்பிறெட், ஆகியோரே குருக்கலாகத் திருநிலைப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-58)





நேற்றுக்காலை இணுவிலில் சுட்டுக்கொல்லப்பட்ட நடராசா ரவீந்திரனின் சடலத்தையும், அவரது தாயார் அழுதுபுலம்புவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- திலீவின்பன்)

## இன்று ஒரு தகவல்

# அகந்தை இல்லாத அரசர்

இப்பொழுது சொல்லப்போவது 200 ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த ஓர் உண்மை நிகழ்ச்சி அப்போது சிவகங்கை சமஸ்தானத்துக்குத் தலைவராக இருந்தவர் மருது பாண்டியர்.

காளையார் கோயிலுக்கு ஒரு பெரிய தேர் செய்ய வேண்டும் என்று ஆசைப்பட்டார். அதற்குவேண்டிய பொருள்களையெல்லாம் சேகரம் பண்ணினார்...சிற்பிகளையெல்லாம் வரவழைத்தார்.

கடைசியாக அத்தேரின் அச்சுக்கு ஒரு பெரிய மரம் தேவைப்பட்டது. அதற்கு பொருத்தமான ஒரு மரம் எங்கே கிடைக்கும் என்று தேடினார். அவருடைய ஆட்சிக்கு உட்பட்ட திருப்பூவனத்திலே வைகையாற்றுக்குத் தென்கரையில் உள்ள ஆலயத்திற்கு எதிரிலே ஒரு பழமையான.... பெரிய மருதமரம் ஒன்று இருப்பதாக கேள்விப்பட்டார்.

உடனே அதை வெட்டி அனுப்பும் படி அங்கேயுள்ள அதிகாரிகளுக்கு உத்தரவு அனுப்பினார். அதிகாரிகள் உடனே அதற்கான ஆட்களை கூட்டிக்கொண்டுபோய் மரத்தை வெட்ட ஆரம்பித்தார்கள். அதைக் கேள்விப்பட்டவுடனே ஒருவர் அங்கே ஓடிவந்தார். அவர்... திருப்பூவன நாதருக்கு பூசை செய்து வந்த ஆதி சைவர்களுள் ஒருவர்.... போ.... புஸ்பவனக்குருக்கள். 'அந்த மரத்தை வெட்டாதீங்க... வெட்டாதீங்க...'' என்று சொல்லிக்கொண்டே ஓடிவந்தார்.

"இது மன்னர் உத்தரவு'' என்றார்கள் அதிகாரிகள் "அந்த மன்னர் மீது ஆணை:.. நீங்கள் இதை வெட்டக்கூடாது என்றார் அவர். அதிகாரிகளுக்கு ஒன்றுமே புரியவில்லை... உடனே இதை மன்னருக்கு தெரிவித்தார்கள்... இதைக்கேட்டதும் மன்னருக்கு வியப்பு! உடனே அவரே புறப்பட்டு நேராக அங்கே போனார். "யார் அவர்? மரத்தை வெட்டக்கூடாது என்றவர்..." என்று கேட்டார்.

"அவர் உங்களுக்கு பயந்து மதுரைக்குப்போய் விட்டார்!! என்றார்கள். உடனே மன்னர் அவருக்கு ஓர் அபய நிருபம் அனுப்பிவைத்தார். அந்தக்காலத்திலேயே குற்றவாளிகளுக்கு பயந்து ஓடினவர்களுக்கோ... நீங்கள் பயப்பட வேண்டாம்... இங்கே வந்தால் ஒரு துன்பமும் நேராது...என்று அரசர்கள் அனுப்பி வைக்கிற கடிதத்துக்கு "அபய நிருபம்'' என்று பெயர்

கடிதத்தைக்கண்டதும் அவர் கொஞ்சம் தைரியமாக திரும்பி வந்தார். மன்னர் கோபப்படாமல் கேட்டார் உடனே "அந்த மருத மரத்தை வெட்ட வேணாம் என்று தடுத்தது உண்டா?'' என்றார். "ஆமாம்'' என்றார் அவர்."காளையார் கோவில் தேர் வேலைக்காக அதை வெட்டச்சொல்லி இருந்தேன்... அப்படி இருக்கும் போது நீங்கள் அதை தடுக்கலாமா?'' என்றார் மன்னர்.

'அதற்கு சில காரணங்கள் உண்டு'' என்றார் இவர்."என்ன காரணம் அது....எதுவாய் இருந்தாலும் பயப்படாமல் சொல்லாம்'' என்றார் மன்னர். வெளியூர்களில் இருந்து நிறையப்பேர் இங்கே வர்றாங்க அப்படி வர்றவங்க ஆற்றிலே குளிச்சுட்டு சாமி தரிசனம் பண்ணுவாங்க. எப்பவும் அங்கே தண்ணீர் ஓடறதில்லை கோடைகாலத்திலே வடகரையோரமாகத் தான் கொஞ்சம் தண்ணீர் ஓடும்.:. அப்போது அங்கே குளிச்சிட்டு.... சுடு மணலிலே நடந்து வாறவங்க இந்த மரத்து நிழலிலே கொஞ்ச நேரம் இருந்திட்டு வாறது வழக்கம்.

இந்த மரம் எவ்வளவோ காலமாக இங்கே இருக்கு. எவ்வளவோ பேர் அதன் நிழலிலே இளைப்பாறி வாறாங்க... வயசானவங்க... பெண்கள்... குழந்தைகள்... கருவுற்ற தாய்மார்கள்... இவங்க எல்லாம் வெய்யிலிலே தவிச்சுப்போயிடுவாங்க ஆனால் கோயில் தேருக்கு இந்த மரம் தான் வேணும் என்கிறது இல்லை...இந்த மரத்தைப்பார்க்கும் போது எனக்கு மன்னர் நினைவுதான் வரும். எவ்வளவோ பேருக்கு நிழலாக இருக்கு. எல்லாவற்றையும் விட முக்கியமான ஒரு காரணம்... இந்த மருதமரம் மன்னருடைய பெயரைத்தாங்கிக் கொண்டிருக்கும்'' என்றார்.

மருதுபாண்டியர் நிமிர்ந்து அந்தக்குருக்களைப்பார்த்தார். "நீங்கள் செய்தது சரிதான்...மரத்தை வெட்டவேண்டாம்!'' என்றார். அந்த மரம் வெட்டப்படவில்லை தேருக்கு வேறு ஒரு மரத்தை கொண்டுவந்து விட்டார்கள். இந்தச்சம்பவம் ஓர் உண்மைச் சம்பவம் 200ஆண்டுகளுக்கு முன்னாடி நடந்தது. அகந்தை இல்லாத ஓர் அரசன் தன்னுடைய உத்தரவு தடுக்கப்படும் போது அதில் உள்ள நியாயத்தை உணர்ந்து அதை மாற்ற முடியும்.மருதுபாண்டியர் அப்படிப்பட்ட ஒரு சிறந்த மன்னர்.

நமக்குவேண்டிய ஆள் ஒருத்தர். இருந்தார்.வசதியான ஆள் ஊருக்கு அவர் தான் தலைவர் கிராமத்து எல்லையிலே போக் குவரத்துக்கு இடைஞ்சலாக ஒரு மரம் நிற்கிறது. அதை வெட்டணும் என்று மக்கள் சொன்னார்களாம். உடனே இவர் சில ஆட்களை அனுப்பி அதை வெட்டச்சொன்னாராம் இவர்கள் போய் அதை வெட்டும்போது சில பேர்வந்து அதை தடுத்தார்களாம் "இது தலைவர் உத்தரவு ஏன் தடுக்கிறிங்க'' என்றார்களாம் இவர்கள்.

"நாங்கள் ஏன் இதனை தடுக்கிறோம் என்றால் இந்த மரத்தைப் பார்க்கும் போது எங்களுக்கு தலைவர் முகம் ஞாபகத்திற்கு வரும். அவரை ஞாபகப்படுத்திக்கொண்டிருக்கிற இந்த மரத்தை வெட்டாதீங்க என்றார்களாம். இதைக்கேள்விப்பட்டதும் அது என்ன அப்பேர்ப்பட்ட மரம் என்று விசாரித்தேன். அதற்கு அப்புறம் அவர்கள் சொன்னார்கள் "அது தூங்கு மூஞ்சி மரம்'' அப்படி என்று .

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தமிழர்களை ஒடுக்கவே அரசு முயற்சி
# நாடாளுமன்றில் சம்பந்தன் குற்றச்சாட்டு

நாடாளுமன்றத்தில் வடக்கு-கிழக்கு வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதை வலியுறுத்தும் ஒத்திவைப்புத் தீர்மானத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் நேற்று முன்தினம் புதன்கிழமை தாக்கல் செய்தார்.

அரசாங்க அமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற அமெரிக்கா ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகளின் அறிக்கைகளை தனது உரையின் போது சம்பந்தன் சுட்டிக்காட்டினார். வடக்கு -கிழக்கானது தமிழர்களின் தாயகம் என்றும் தென்னிலங்கையானது வடக்கு-கிழக்கு தமிழர்களை அங்கீகரிப்பதில்லை. தமிழர்களுக்கான அரசியல் தீர்வையும் அது முன்வைக்கவில்லை என்றார் சம்பந்தன்.

யுத்தத்தின் மூலம் தமிழர்களை ஒடுக்கவே ஸ்ரீலங்கா அரசாங்கம் முயற்சிக்கிறது என்றும் சம்பந்தன் குற்றம் சாட்டினார்.1950களிலிருந்து சிங்களத் தலைமையின் கீழ் வாழ தமிழர் கள் தயாரில்லை என்று தெரிவிக்கப்பட்டுவிட்டது. ஜெனீவாப்பேச்சுக்களின் அடிப்படையில் துணை இராணுவக் குழுவினரின் ஆயுதங்களை அரசாங்கம் களையவில்லை. அக்குழுவினர் தற்போதும் செயற்பட்டு வருகின்றனர். பேச்சுக்களை அரசாங்கம் மீளத் தொடங்காவிட்டால் தமிழ் மக்கள் தங்களுக்கான தீர்வை தாங் களே தீர்மானிப்பர் என்றும் சம்பந்தன் கூறினார். இரா. சம்பந்தனின் உரைக்கு மறுப்புத் தெரிவித்த ஜாதிக ஹெல உறுமயவின் எல்லாவெல மேதானந்த தேரர் வடக்கு-கிழக்கு தமிழர்களின் தாயகம் என்பதற்கான வரலாற்று ரீதியான ஆதாரம் எதுவும் இல்லை.வரலாற்று ரீதியாக சிங்களவர் வடக்கில் வாழ்ந்தமைக்காக வரலாற்று ஆதாரங்கள் உண்டு. ஆகையால் எந்த ஒரு குழுவும் இந்த நாட்டின் எந்தப்பகுதியையும் தமது தாயகமாகக் கோர முடியாது. பழங்காலத்திலிருந்தே வடக்கு-கிழக் கில் சிங்களவர்கள் வாழ்ந்துவருகின்றனர். அப் பகுதியில் தமிழர்களுக்கான தாயகம் ஏதும் இல்லை என்றார் அவர். (அ)



# கிணறுகள் புனரமைப்பு

ஏழாலை மத்தி வடக்கு பகுதிகளில் உள்ள பொதுக் கிணறுகள், விவசாயக் கிணறுகள் என்பன ஏழாலை வடக்கு சமுர்த்தி உத்தியோகத்தரின் பணிப்பின் பேரில் புனரமைக்கப்பட்டு வருகிறது. இத் திட்டத்தினை சமுர்த்தி செயற்திட்ட உத்தியோகத்தர் சிவரூபன் பொறுப்பேற்றி நெறிப்படுத்தி வருகின்றார். (து-122)



ஸ்ரான்லி வீதி இலங்கை வங்கி 2ஆம் கிளையில் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்ட 15இலட்சம் ரூபா பெறுமதியான ஹண்டர் வாகனத்தின் சாவியை வங்கி வாடிக் கையாளர் என். தனேந்திரன் இலங்கை வங்கி வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் வீ. அருமை நாயகத்திடமிருந்து பெற்றுக் கொள் வதையும், அருகில் மேற் படி வங்கியின் முகாமை யாளர் ஆர். சிவராமலிங் கமும் ஊழியர்களும் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(படம் :திலீவின்பன்)

# உள் முரண்பாடுகளில் சிக்கித் தவிக்கும் ஐ.தே.க

(கொழும்பு)

கொழும்பு மாநகரசபை தேர்தல் தொடர்பான அக்கட்சியின் கொழும்பு மாவட்ட தலைவர் முஹம்மதுவின் செயற்பாடுகளுக்கு ஐ.தே.கவின் மூத்த உறுப்பினர் சிறிசேன கூரே கடும் கண்டனம் தெரிவித்து கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

மேலும் மிலிந்த மொறகொடவை விமர்சித்து ரணிலுக்கு முஹம்மது கடிதம் அனுப்பியதையும் சிறிசேன கூரே கண்டனம் செய்துள்ளார்.

ரணிலுக்கு சிறிசேன கூரே அனுப்பியுள்ள கடிதத்தில் ஐக்கிய தேசியக்கட்சி இப்போது வலுவற்ற சக்திகளின் கைகளுக்குப் போய்க்கொண்டிருக்கிறது. கட்சியை மறுசீரமைக்க வேண்டிய தேவையுள்ளது. அத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ளும் போது ஒவ்வொருவருமே ஆதரிப்பார்கள்.

மிலிந்த மொறகொட தொடர்பான முஹம்மதுவின் கருத்துக்கள் அனுபவமற்ற நபரின் கருத்துக்களாக உள்ளன. நீண்டகாலம் அரசியலிருந்து ஒதுங்கியிருந்த நான் மிலிந்தமொறகொட கேட்டுக்கொண்டதற்கிணங்க கடந்த ஜனாதிபதி தேர்தலில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கி னேன்.

கொழும்பு மாநகரசபை தேர்தலில் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் உள்ளே இருந்து முட்டுக்கட்டைகள் போடப்பட்டமையே காரணம் என்றும் குற்றம்சாட்டப்பட்டிருந்தது. (து)



பருத்தித்துறை - இராமகிருஷ்ண சாரதாசேவாச்சிரமத்தில் இடம் பெற்ற குரு பூர்ணிமா விழாவின் காட்சி. (பருத்தித்துறை நிருபர்)

# நிதி சட்ட முன்வடிவுகளை கைவிடுகிறது அரசாங்கம்

ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் ஜே.வி.பியின் எதிர்ப்புக்களால் நிதித்துறை தொடர்பிலான பல சட்ட முன்வடிவுகளை நாடாளுமன்றில் தாக்கல் செய்யும் முடிவை அரசாங்கம் கைவிட்டுள்ளது.

நாடாளுமன்றில் அரசாங்கத்துக்கு பெரும்பான்மை கிடைக்காது என்பதால் மொத்தம் 7 சட்ட முன்வடிவுகள் கைவிடப்பட்டுள்ளது.

இந்த சட்ட முன்வடிவுகளுக்கு ஜே.வி.பியின் ஆதரவைப் பெறுவதற்காக மஹிந்தவின் சகோதரர் பசில் ராஜபக்ஷ மேற்கொண்ட முயற்சி தோல்வி அடைந்தது. இருப்பினும் ஐக்கிய தேசியக்கட்சியின் ஆதரவைப் பெற பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க முயற்சித்து வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனிடையே மற்றொரு நிதி சட்ட முன்வடிவை ஜாதிக ஹெல உறுமய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன எதிர்க்க உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மஹிந்தவின் அரசாங்கம் ஒரு பெரும்பான்மை பெற்ற அரசாங்கமாக இல்லாத நிலையில் இதர கட்சிகளைச் சார்ந்தே அரசாங்க நிகழ்ச்சி நிரல்களை நிறைவேற்றியாக வேண்டிய நிலையில் இனப்பிரச்சினைக்கு மட்டும் எப்படி ஒருமித்த கருத்து உருவாக்கத்தை ஏற்படுத்தி தீர்வு காணப்போகிறது என்று அரசியல் நோக்கர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். (து)

# புனரமைப்பு வேலைத் திட்டங்கள்

(கோண்டாவில்)

உள்ளூராட்சி உதவி ஆணையாளரால் வலி கிழக்கு பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட மூலதன நன்கொடை நிதியை பயன்படுத்தி வலி கிழக்கு பிரதேச சபையின் கோப்பாய் உப அலுவலக கட்டடப் புனரமைப்பு, உரும்பிராய் நவீன சந்தைகட்டடம் புனரமைப்பு ஆகிய வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன எனத் தெரிகிறது.

இவ்வேலைத்திட்டங்களுக்கான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அங்கீகாரத்திற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அவரது அனுமதி கிடைத்ததும் திட்டமிட்டபடி வேலைத் திட்டங்கள் விரைவில் ஆம்பிக்கப்படும் என வலி கிழக்கு பிர தேச சபை செயலாளர் பெ. நடராசா அறிவித்துள்ளார். (து-36)

# புதிய ஜனநாயக கட்சியின் 28ஆவது ஆண்டு விழா

புதிய- ஜனநாயகக் கட்சியின் 28ஆவது ஆண்டு விழாக் கூட்டம் எதிர்வரும் 23ஆம் திகதி காலை 10.00 மணிக்கு அட்டன் நகர சபை மண்டபத்தில் கட்சியின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி இ.தம்பையா தலைமையில் நடைபெறவுள்ளது.

யுத்த நிறுத்தம்- பேச்சுவார்த்தை அரசியல் தீர்வை வலியுறுத்தியும் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்தி குறைக்க கோரியும் தோட்டத் தொழிலாளர்களுக்கு 350 ரூபா சம்பள உயர்வை வழங்க வேண்டும் என்பதை வற்புறுத்தியும் மேற்படி ஆண்டு விழாக் கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் புதிய- ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் ஆண்டுவிழா உரையினை நிகழ்த்துவார். மேலும் கட்சியின் மலையகப் பிரதேச செயலாளரும் வலப்பனை பிரதேச சபை உறுப்பினருமான ச.பன்னீர்ச்செல்வம், கல்வியாளர் சி.இராஜேந்திரன், பாட்டாளி வர்க்க புதிய தொழிற்சங்க செயலாளர் ம.சத்தியமூர்த்தி, கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் சட்டத்தரணி சோ.தேவராஜா, புதிய மலையகம் வெ.மகேந்திரன், கல்வியாளர் ஜெ.சற்குருநாதன் உட்பட பலர் உரையாற்றவுள்ளனர். (அ)

# வீதி மின் விளக்குகளின் தொகையை கட்டுப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

தேசிய மின்சார சேமிப்புத் திட்டத்தின் கீழ் வீதி மின் விளக்குகளை கட்டுப்படுத்துவது தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று கடந்த திங்கட்கிழமை இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் இலங்கையிலுள்ள சகல உள்ளூராட்சி மன்றங்களினதும் தலைவர்கள் கலந்துகொள்ளவுள்ளதாக மின்சக்தி, எரிசக்தி அமைச்சின் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

நாட்டிலுள்ள சகல உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகப் பிரதேசங்களில் வீதி மின் விளக்குகள் அதிகளவில் பொருத்தப்பட்டுள்ளதால் மின்சாரசபை வருடாந்தம் 1000 மில்லியன் ரூபாவை இழந்து வருகிறது.

இந்த நிலையில் வீதி விளக்குகளின் எண்ணிக்கையை 40 வீதத்தால் குறைக்குமாறு உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் கேட்கப்படவுள்ளனர்.

மேலதிக வீதி மின் விளக்குகளை அகற்றுவதன் மூலம் மின்சாரசபை எதிர்கொண்டு வரும் நட்டத்தினை குறைக்க முடியுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (அ-7)

# கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேசத்தில் மாமுனை தொடக்கம் கேவில் வரையான பகுதியில் கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்படவுள்ளதால் இம்மாதம் 26ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 15ஆம் திகதி வரையான காலப் பகுதியில் தங்கள் வளர்ப்பு நாய்களை கட்டி வைத்து ஒத்துழைக்குமாறு பொது மக்கள் வேண்டப்படுகின்றார்கள் எனவும்,

முதற்கட்டமாக வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, கேவில் வரையான பகுதியில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது எனவும் பருத்தித்துறை பிரதேச சபை செயலாளர் சி.பசுபதி தெரிவித்துள்ளார். (து)

# அறநெறிப் பாடசாலை சிறார்கள் அனைவருக்கும் வழிகாட்ட வேண்டும்

'பிள்ளையின் கற்றலை மழுங்கடிக்கச் செய்யும் வகையில் வீடுகளில் தொலைக் காட்சிப் பெட்டிகளின் பாவனையில் பெற்றோர்களின் செயற்பாடு கவலைக்குரியதாக சமகாலங்களில் மாறி வருகின்றது. எனவே இக்குறைபாட்டை நீக்க பெற்றோர்களின் மனமாற்றம் அவசரமாக வேண்டப்படுகின்றது'.

இவ்விழாவில் உரையாற்றிய பிள்ளையொன்று 'பெற்றோர்களே எங்களுடைய கல்வியிலும் எதிர்காலத்திலும் அக்கறைகொண்டு இரவுவேளைகளில் உங்களுடைய தொலைக் காட்சிப் பெட்டிகளுக்கு ஓய்வுகொடுங்கள்' என முன்வைத்த கோரிக்கைக்கு மதிப்பளியுங்கள் என நீர்வேலி சிறிமுருகன் அறநெறிப் பாடசாலையின் இரண்டாவது ஆண்டு விழா நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி அதிபர் இ.குணநாதன் தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், இதற்கெனப் பல சட்டங்களை உருவாக்க முடியாது. மாறாக எமது மனமாற்றமே சட்டத்தை விடப் பலம் வாய்ந்தது. எனவே சட்டங்களுக்குஅப்பால் இதை நாம் கடைப்பிடிப்போம்.

அறநெறிப் பாடசாலைகளில் கல்வி பயிலும் சிறார்கள் தாம் மட்டுமன்றி சமூகத்தில் வாழும் ஏனையோரையும் ஒழுக்க நெறிமுறை வழுவாதிருக்க வழிகாட்ட வேண்டும்.

இப்பாடசாலைகளை பயனுறுதி மிக்கதாக மாற்றவும் வினைத்திறன் மிக்கதாகவும் மாற்றுகின்ற பொறுப்பு சமூகத்தைச்சார்ந்தது. எனவே சமூகம் இதை ஒருபோதும் தட்டிக்கழிக்கக்கூடாது என்றார். (அ-79)

# நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும்

யாழ்.உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலையின் நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை சனிக்கிழமை காலை 9.15 மணிக்கு கைலாசபிள்ளை மண்டபத்தில் கல்லூரி அதிபர் என்.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் ஆசி உரையை பிரம்மஸ்ரீ க.குகதாசக்குருக்களும், நிறுவுனர் நினைவு உரையை மேற்படி கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர் திருமதி எஸ்.சுப்பிரமணியச் செட்டியாரும், பிரதம விருந்தினர் உரையை யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி உபபீடாதிபதி (நிதி, நிர்வாகம்) எஸ்.ஆர்.சத்தியேந்திரபிள்ளையும் நிகழ்த்துவார்கள். யாழ்.ஐ.நா சிறுவர் நிதியத்தின் உதவித் திட்ட உத்தியோகத்தர் அ.ஸ்ரீஸ்கந்தராஜா சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார். (து)

# கூடிய வெளிக்கள பணிகளில் ஈடுபட பிரதேச செயலர்களுக்கு பணிப்புரை

(கொழும்பு)

பிரதேச செயலர்கள் குறைந்தது கிழமைக்கு மூன்று தினங்களாவது வெளிக்கள அரசாங்கப் பணிகளில் ஈடுபட்டிருக்க வேண்டுமென்று அமைச்சர் சரத் அமுனுகம பணிப்புரை விடுத்துள்ளார்.

தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக பிரதேச செயலகங்களுக்கு வரும் பொதுமக்களுக்கு வினைத்திறனான சேவையைப் பெற்றுக்கொடுப்பதே இதன் நோக்கமாகும்.

மேலும் தமது பயணங்களின் போது கிராம சேவகர் காரியாலய நடவடிக்கைகளையும் கவனத்தில் கொள்ளுமாறு அமைச்சின் செயலாளர்களிடம் கேட்டுள்ளார்.

இதுதவிர மாவட்ட செயலாளர்களும் கிழமைக்கு இரு தினங்கள் வெளிக்களப் பணிகளில் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

சிறந்த பிரதேசத்தை தெரிவு செய்வதற்கான போட்டியொன்றை ஒழுங்குசெய்யுமாறு அமைச்சின் உள்துறை நடவடிக்கை பிரிவிற்கு பணிப்புரை வழங்கியுள்ளார். (அ-9)

# எயிட்ஸ் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேசத்தில் உள்ள உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான எயிட்ஸ் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கு உலக தரிசன நிறுவனத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடந்த திங்கட்கிழமை செம்பியன்பற்று அ.த.க.பாடசாலையிலும், தாளையடி றோ.க.த.க பாடசாலையிலும் இடம்பெற்ற நிகழ்வில் மருதங்கேணி பிரதேச வைத்தியசாலை பொறுப்பதிகாரியும் மருதங்கேணி பிரதேச பொது சுகாதார பரிசோதகரும் கலந்து எயிட்ஸ் பற்றிய விழிப்புணர்வுக் கருத்துக்கள் வழங்கினர். இதனையடுத்து எயிட்ஸ் பற்றிய போட்டியில் வெற்றி பெற்றோருக்கு உலக தரிசன நிறுவனத்தால் பரிசுகள் வழங்கப்பட்டன.

செம்பியன் பற்று அ.த.க.பாடசாலையைச் சேர்ந்த வீ.தனுசியா, எஸ்.ஜெசின், த.கௌசிகா, தாளையடி றோ.க.த.க பாடசாலையைச்சேர்ந்த பெ.ஜெபதாஸ், டி.றொபினா, சி.கயூரன் ஆகியோர் பரிசுகளை பெற்றனர். இந்நிகழ்வு ஏனைய பாடசாலைகளிலும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (து)

# வீட்டினுள் அத்துமீறி நுழைந்த மூவர் விளக்கமறியலில்

யாழ்.குற்றத்தடுப்பு பிரிவினரால் சந்தேகத்தின் பேரில் நேற்று முன்தினம் மூவர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.


இவர்கள் மூவரும் நேற்று யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது இவர்களால் சுவீகரிக்கப்பட்ட மோட்டார் சைக்கிளை உரியவர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்ட நீதிபதிஇவர்கள் மூவரையும் இம்மாதம் 31ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார். (து-133)

# சிறந்த கல்விமான்களை உருவாக்க தமிழீழ தேசியத் தலைவர் திட்டம்

தமிழீழ மாணவர்களை சிறந்த கல்விமான்களாக வளர்த்தெடுப்பதற்கு தமிழீழத் தேசியத் தலைவர் கொண்டுள்ள விருப்பத்திற்கு செயல் வடிவம் கொடுப்பதற்கு ஆசிரியர்களும் பெற்றோர்களும் முழு அளவில் செயலாற்றி ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் சி.வ.தமிழேந்தி தெரிவித்துள்ளார்.

மாவீரர் கப்டன் ரஞ்சன் லாலாவின் நினைவாக தேசியத் தலைவரின் சிறப்பு நிதியத்தின் கீழ் முல்லைத்தீவு உடையார்கட்டு இரட்டைமடு தமிழ் வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட பாடசாலைக் கட்டடம் திறந்துவைக்கப்பட்ட போது சிறப்புரையாற்றிய போதே இதனை அவர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ மாணவர்களின் கல்வியைச் சிதைத்தழிக்கும் நோக்குடன் திட்டமிட்ட நடவடிக்கைகளை ஸ்ரீலங்கா அரசாங்கம் முன்னெடுத்த வேளை அதனை முறியடித்து தமிழீழ மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவதற்காக பல்வேறு செயற்திட்டங்களை தமிழீழத் தேசியத் தலைவர் மேற்கொண்டு வருவதை அவர் சுட்டிக்காட்டினார். (அ)



மக்கள் வங்கி யாழ்.பிராந்திய தலைமை அலுவலகத்தில் அந்தரங்கச் செயலாளராக பணியாற்றிய க.வ.சிவச்சந்திரதேவனுக்கு வங்கியின் ஊழியர் நலன்புரிச் சங்கத்தால் நடாத்தப்பட்ட பிரியாவிடை நிகழ்வில் சிவச்சந்திரதேவன் உரையாற்றுவதையும் அருகே பிராந்திய முகாமையாளர் து.ரகு, உதவிப்பொதுமுகாமையாளர் ந.தயானந்தன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

# இலங்கை வங்கியின் 'ரன் கெகுளு' திட்டப்படி இவ்வாண்டு 1250 மாணவர்களுக்கு புலமைப் பரிசில்

(கொழும்பு)

2006ஆம் ஆண்டை சிறுவர் ஆண்டாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரகடனப்படுத்தியதையடுத்து இலங்கை வங்கி இதுவரை காலமும் 750 மாணவர்களுக்கு வழங்கிவந்த புலமைப்பரிசிலை இவ்வருடம் 1250 பேருக்கு வழங்கவுள்ளதாகப் பிரதி நிதியமைச்சர் ரஞ்சித் சியாம்பலப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

இலங்கை வங்கியின் ரன் கெகுளு மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் வைபவம் கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி தலைமையில் அலரி மாளிகையில் நடைபெற்றபோதே பிரதிநிதியமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தமதுரையில்,

அரச வங்கிகளைப் பாதுகாப்பதற்கான பல சட்டமூலங்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அரச வங்கிகள் தொடர்பில் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் வகையில் அவற்றை செயற்படுத்துவது அவசியமாகும்.

ஜனாதிபதி நிதியமைச்சராகவிருந்து முழு நாட்டுக்குமான அபிவிருத்தித் திட்டங்களை வகுத்துச் செயற்படுத்துவது சிறப்பாகுமென்று மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் உரை நிகழ்த்திய இலங்கை வங்கியின் தலைவர் உதயசிறி காரியவசம் 'கமட நய' கிராமிய கைத்தொழில் திட்டத்திற்கு இலங்கை வங்கி 2 ஆயிரத்து 161 மில்லியன் ரூபாவை கடனாக வழங்கியுள்ளது என்றும் இதனைத் தவிர சுயதொழிலில் ஈடுபட்டுள்ளோருக்கு பெருந்தொகை நிதியை கடனாக வழங்கி வருகிறது என்றும் கூறினார்.

ரன்கெகுளு புலமைப்பரிசில் திட்டத்திற்கென இம்முறை 14 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன் 1250 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (து-7)

# சுவாமி விவேகானந்தர்

## ஞானப் பட்டறையிலே

அந்த எண்ணம் உடலின் ஒவ்வொரு அணுவிலும் எதிரொலிக்கத் தமது இருக்கையிலிருந்து எழுந்தார் பரமஹம்சர் நரேந்திரனை இறுகப் பற்றினார். அறைக்கு வடப்புறத்தேயுள்ள முகமண்



டபத்துக்கு அவனை இட்டுச் சென்றார். அவரது கண் மலரிலிருந்து கசிந்த நீர் முகமலரில் பரவியது. மிகவும் கோமளமான குரலில் அவனை விளித்துக்கூறுவார்: 'ஆகா நீ எவ்வளவு காலம் தாழ்த்தி வந்திருக்கிறாய்? என்னை இவ்வளவுகாலம் காக்கவைப்பதற்கு உனக்கு எவ்வளவு கொடுமை இருக்க வேண்டும். இவ் உலகமே நினைவான மாந்தரின் தூய்மையற்ற வார்த்தைகளைக் கேட்டு என் காது கொப்பளித்து விட்டது. என்னுடைய அந்தரங்கத்தின் அந்தரங்கம் நுகர்ந்த அநுபவங்களைப் புரிந்துகொள்ளக்கூடிய ஒருவரிடம் அவித்துக்கொட்டி என் சுமையைக் கழித்துக்கொள்வதற்கு எவ்வளவு துடிக்கிறேன் தெரியுமா?

ஞான அமுதத்தை நிரப்பி வைத்துக்கொண்டிருந்த ஸ்ரீராம கிருஷ்ண தேவரிடம் அந்த அமுதத்தைத் தவிர மற்றதையெதையோ நாடியார் யாரோ வந்தனர். இன்றுதான் அமுதத்தையே நாடி பொருத்தமான ஒருவன் வந்திருக்கிறான்!

நரேந்திரன் ஞானத்துக்காக வந்தது உண்மைதான். ஆனால் அந்த ஞானத்தைப் பரமஹம்சர் நிச்சயமாக அளிப்பார். என்று அவன் எண்ணவில்லை. எனவே அவர் அமுத கலசத்தைத் திறக்க ஆர்வம் கொண்டபோது கூட இவரிடம் அமுதம் இருக்குமா? என்றுகேள்வி கேட்கும் நிலையிலேயே அவன் இருந்தான். பகுத்தறிவு செய்த காரியம் அது!

விம்மலில் வார்த்தைகள் சிக்கிக்கொண்டு ஸ்ரீராம கிருஷ்ணர் பேசியது எதனால் என்பதை நரேந்திரனால் புரிந்துகொள்ள முடியவில்லை.

அவரோ உணர்ச்சிகள்மேலோங்க மேலும் மேலும் பேசிக் கொண்டே போனார்.

'பிரபோ நீ மகாமுனிவரான நரன்-நாராயணனின் அவதாரமான நரன் என்பதை நான் அறிவேன். மனித குலத்தின் துயரங்களைத் தீர்க்கவே நீ மீண்டும் பிறந்திருக்கிறாய்!' பரமஹம்சரின் செய்கைககள் நரேந்திரனுக்குஅர்த்தமாகவில்லை. தன்னை நீண்ட காலமாக அறிந்தது போல வும், பின்னர் தான் பிரிந்ததால் ஏங்கியது போலவும் அவர் கூறுவதெல்லாம் அவனுக்கு சரியான வார்த்தைகளாகவே தோன்றவில்லை இந்த மனிதருக்கு அசல் பைத்தியம்தான் பிடித்திருக்கிறது என்றே அவன் எண்ணிவிட்டான். விசுவநாத தத்தரின் புத்திரனான தன்னை யாரோ என்றெணணி ஏதோதோ உளறுகிறார் அவர் என்றே அவன் நினைத்தான். எனினும் அவர் என்ன தான் செய்கிறார் என்று பார்ப்பதற்காகச் சும்மாவே இருந்தான்.

ஸ்ரீராமகிருஷ்ணர் தமது அறைக்குத் திரும்பினார். இனிப்புப் பணியாரங்கள் பலவும் கற்கண்டும், வெண்ணெயும் எடுத்து வந்தார். ஞானாமுதத்தைப் புகட்டு முன் தன் பிரிய சிஷ்யனின் வயிற்றுக்கு அமுது படைக்க விரும்பிய பரமஹம்சர் தாம் கொண்டு வந்த உணவு வகைகளைத் தமது கரத்தாலேயே நலேந்திரனுக்கு ஊட்டலானார். 'அந்த இனிப்புப் பணியாரங்களை என்னிடமே கொடுங்கள். நான் என்னுடன் வந்துள்ள நண்பர்களுடன் அவற்றைப் பகிர்ந்து கொள்ளுகிறேன்' என்று கூறி ஸ்ரீராமகிருஷ்ணரின் செயலை அவன் மறுத்தும் பயனில்லை. அவர்களுக்கு வேறு தனியாக வழங்கப் படும் என்று கூறி நரேந்திரனே அவ்வளவையும உண்ணும் படிச் செய்து விட்டார் பரமஹம்சர். அவனுடைய கையைப்பிடித்துக்கொண்டு 'நீ மட்டும் தனியாக விரைவிலேயே ஒருநாள் வா; அப்படி வருகிறேன் என்று உறுதி மொழி கொடு' என்றார். அவர் கெஞ்சின கெஞ்சலைப்பொறுக்க மாட்டாமல் நரேந்திரனும் சம்ம தம் தெரிவித்தான்.

இருவருமாக மீண்டும் நண்

## அத்தியாயம் - 13

பர்கலிருந்த அறையை அடைந்தனர். அங்கு பலர் கூடியிருந்தனர். வயோதிபர்கள், நடுத்தர வயதினர், நரேனைப்போன்ற வாலிபர்கள் எல்லோரும் இருந்தனர். அவர்கள் யாவரும் ஸ்ரீராம கிருஷ்ணரை மகனாக மதித்து வணங்கினர். ஸ்ரீராம கிருஷ்ணர் அவர்களை நோக்கி, நரேனைப் பாருங்கள்! சரஸ்வதியின் வித்யா பிரகாசத்துடன் அவன் எப்படி ஜொலிக்கிறான் பாருங்கள்! என்று பேரன்பு பொங்கக் கூறினார். அவர்கள் நரேந்திரனை அதிசயத்துடன் பார்த்தனர். அதைவிடப் பரமஹம்சர் நடந்துகொண்ட விதத்தில் அதிக அதிசயம் அடைந்தனர். அவர் ஏன் இப்படி ஒரேயடியாக மகிழ்ந்து போகிறார்? இந்தப்பிள்ளையிடத்தில் அப்படி என்ன மகிமையைக் கண்டுவிட்டார்.

'குழந்தாய்! நீ தூங்குமுன் ஓர் ஒளியினைக் காண்கிறாயா?' எனத் திடீரென நரேனக் கேட்டார் பரமஹம்சர் அவரிடத்தில் ஒளிக்கக்கூடிய வாழ்வு எதுவுமே தனக்குக் கிடையாது என்றறியாதநரேன், ஆம்காண்கிறேன் என்றான். ஆகா! எவ்வளவு நிஜமாகப் போயிற்று! இவன் ஒரு தியான சித்தன்; பிறப்பிலேயே தியானம் கைகூடியவன். என்று நரேந்திரனைக் காட்டிக் கூறினார் ஸ்ரீராமகிருஷ்ணர்.

பிறகு அடியார்களுடன் உரையாடினார் பரமஹம்சர். அவரையே கவனித்துக்கொண்டிருந்தான் நரேந்திரன். அவரது பேச்சினாலும் அங்க அசைவுகளிலும் நடத்தையிலும் சித்தப் பிரமைக்கான எந்தச் சின்னமும் தெரியவில்லை. பரவச நிலையில் அவர் பேசுவதும், நடந்துகொள்வதும் தூய துறவிலிருந்தே பிறந்தனை என்று கூட நரேந்தினுக்குத் தோன்றாயிற்று. பேசுவதுபோலவே வாழ்ந்து காட்டுபவர் இவர் என்ற எண்ணத்தை அவனிடம் உண் டாக்கியது. எனினும் அவர் மிக மிக எளிமையான மொழியில் உரையாடுவதைக் காணும் போது இவர் பெரிய ஆசாரிய புருஷராக இருக்க முடியுமா என்ற ஐயமும் நரேந்திரனுக்கு ஏற்பட்டது. வார்த்தைச் சுழலில் அகப்படச் செய்து திணறவைக்கும் மேனாட்டுத் தத்துவ சாஸ்திரங்களைப் படிக்கத் தொடங்கியிருந்த நரேனுக்கு அப்படி ஒரு ஐயம் ஏற்பட்டது. நியாயமேயாகும்.

இவர் ஆசாரிய புருஷர்தானா என்று சோதிக்க விரும்பிய நரேந்திரன், தான் இவ்வளவு நாளாகக் கனன்று கொண்டிருந்த மகத்தான வினாவை இவரிடமும் கேட்டுப் பார்த்துவிடுவது என்ற எண்ணத்துடன் அவருக்குச் சமீபமாக நகர்ந்தான். ஆகா அந்தக் கேள்வியை எத்தனை பேரிடம் கேட்டாயிற்று? யாருமே விடை சொல்லாமல், அவனுள் எழுந்ததீயை மேலும் மேலும் மூண்டெழத்தானே செய், திருக்கிறார்கள்?

'மஹாசய, தாங்கள் கட வுளைக் கண்டதுண்டா?' கேட்டே விட்டான் நரேந்திரன் தன் வினாவை.

பட்டுப்போன்ற குரலில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் விடை பகர்ந்தார்; கண்டிருக்கிறேன் பிள்ளாய் கண்டிருக்கிறேன். இதோ உன்னை என் கணமுன்னே காண்கிறேன் அல்லவா இதே போல அவனை கண்டிருக்கிறேன் இல்லை. இதுபோல இல்லை. உன்னை நான் காண்பதைவிட இன்னமும் தெளிவாக் இன்னமும் அயர்த்தியான உணர்வுடன் அவனைக் கண்டிருக்கிறேன்; காண்கிறேன்

கடவுளைக் கண்டுவிட்டோம் என்ற பெருமிதம் அந்த வார்த்தைகளில் தொனிக்கவில்லை. அன்புருவான ஆண்டவனின் அன்பை உணர்ந்த குளுமைதான் அந்தச் சொற்களில் நிரம்பியிருந்தது. கனன்றெழுந்த நரேந்திரநாதனைத் தணிவிக்கும் குரலில் அவர் மேலும் சொன்னார்; நாள் காண்பது மட்டுமன்று. கடவுளை யாரும் காணலாம்; பரம்பொருளை யாருமே அனுபவிக்கலாம். நான் உன்னோடு உரையாடுவது போல அவனுடன் பேசலாம். ஆனால் அதற்கு யார் சிரத்தை கொள்ளுகிறார்கள், மனைவிமக்களுக்காகவும். சொத்து சுதந்திரங்களுக்காகவும் மக்கள் வெள்ளமாகக் கண்ணீர் பெருக்குகிறார்கள். ஆண்டவனுக்காக அழுபவர் யார் இருக்கிறார்கள்? அவனுக்காக ஒருவன் அந்தரங்க சுத்தத்துடன் கதறி அழுதால் நிச்சயமாக அவன் தரிசனம் தருவான்.

இந்தச் சந்திப்பைப்பற்றி நரேந்திரன் என்ன எண்ணினான் என்பதை சுவாமி விவேகாந்தரின் வாய்மொழியாகவே கேளுங்கள். அவருடைய பேச்சு உடனேயே என் உள்ளத்தில் உண்மையெனப் பதிந்தது. கடவுளைக் கண்டிக்கிறேன் என்ற தீரத்துடன் சொல்லக் கூடிய ஒருவரை மதம் என்பது அநுபவ பூர்வமாக உணரவேண்டிய உண்மை உலகை நாம் அனு பவிப்பதைவிட அநந்துமான மடங்கு ஆழந்த உணர்வுடன் அநுபவிக்க வேண்டிய உண்மை என்று கூறும் ஒருவரைக் கண்டுவிட்டோம் என்ற எண்ணம் ஏற்பட்டது. இந்த விஷயங்கள் அவருடைய உதட்டிலிருந்து வெளியாகும் போது சாதாரணமானதொரு சமயப் பிரசாரகரைப் போல அவர் பேச வில்லை என்ற நம்பிக்கை எனக்கு உண்டாயிற்று தம்முடைய மெய் யான உணர்வுகளின் அடி ஆழத்திலிருந்தே அவர் பேசுகிறார் என்று உணர்ந்தேன். எனினும் இப்படியெல்லாம் பேசியவர் (சற்றுமுன்) என்னிடம் ஏன் அப்படி விசித்திர

**ஆன்மீகப் பாதை**
**ரா. கணபதி**

மாக நடந்துகொண்டார் என்பது மட்டும் எனக்குப் பொருத்தமாகப் படவில்லை. ஏதோ ஒரு பொருளிலேயே மனதை செலுத்திப் பித்துப் பிடித்துப் போனவர் அவர் என்றே முடிவு கட்டினேன். என்றாலும் அவருடைய துறவின் மகத்துவத்தை என்னால் மதித்துப்போற்றாமலிருக்க முடியவில்லை. அவர் பித்தராக இருக்கலாம். எனினும் பாக்கியசாலிகளான சிலரே இவ்வளவு துறவுணர்ச்சி பெற்றிருக்க முடியும். சித்தப் பிரமை பிடித்தவர் என்றே வைத்துக்கொண்டாலும் இம் மனிதர் புனிதமானவர் களுக்கெல்லாம் புனிதமானவர். இவர் ஓர் உண்மையான சாது, அதற்காகவே உலகமக்களால்பணிவுடன் போற்றத்தக்கவர் என்று எண்ணமிட்டேன். ஒன்றோ டொன்று போராடும் எண்ணங்களுடன் அவர் முன் தண்டனிட்டேன். கல்கத்தாவுக்கு நான் திரும்புவதற்கு அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டேன்.

(தொடரும்)

# கைதுசெய்யப்படுவோரின் அடிப்படை உரிமைகள் மதிக்கப்பட வேண்டுமென ஜனாதிபதி பணிப்புரை

கைதுசெய்யப்படும் அல்லது தடுப்புக்காவலில் வைக்கப்படும் ஒருவரது அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளித்து அத்தகையோர் மனிதாபிமான ரீதியில் நடாத்தப்படுவதை உறுதி செய்வதற்கான அறிவுறுத்தல்கள் முப்படை மற்றும் பொலிஸ் தலைமை அதிகாரிகளுக்குஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வினால் விடுவிக்கப் பட்டுள்ளது.

இதன்படி முப்படையினர் மற்றும் பொலிஸார் தமது கடமைகளைமேற்கொள்ளும்போது மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அல்லது அதனால் அதிகாரம் அளிக்கப்பட்டவருக்கு அனைத்து ஒத்துழைப்பையும் நல்குவதோடு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்து கைதுசெய்யப்படுவோர் தடுப்புக் காவலில் வைக்கப்படுவோர் ஆகியோரின் அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பு அளிக்க வேண்டும்.

சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கமைய ்கைது செய்வதற்கும் தடுப்பு காவலில் வைப்பதற்கும் உத்தரவு பிறப்பிக்க அதிகாரம் அளிக்கப்பட்டவரால் அன்றி மற்றைய எவராலும் அவசரகால ஒழுங்குவிதிச்சட்டத்தின் கீழ் அல்லது பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் எவரையும் கைது செய்யவோ தடுப்புகாவலில் வைக்வோ முடியாது.

கைதுசெய்பவர் கைதுசெய்யப்படுவோரின் உறவினரால் கேட்டுக்கொள்ளப்படுமிடத்து தமது பெயரையும் பதவி அந்தஸ்தையும் தெரிவிக்க வேண்டும். கைது செய்யப்படும் அல்லது தடுப்புக்காவலில் வைக்கப்படும் நபருக்கு கைதுசெய்யப்படுவதற்கான காரணத்தை தெரிவிக்க வேண்டும்.

இதற்காகக் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் கைதுசெய்யப்படுபவர் அல்லது தடுப்புக்காவலில் வைக்கப்படுபவர் என்ன காரணத்துக்காக அவ்வாறு கைது செய்யப்பட்டார் என்ற காரணங்களைக் குறிப்பிட்டு கைதுசெய்யப்படுவோரது உறவினருக்கு வழங்க வேண்டும். அதில் கைதுசெய்பவரது பெயரும் தரமும், கைது செய்த நேரமும் திகதியும் குறிப்பிடப்படுவதோடு, கைது செய்யப்பட்டவர் எங்கு தடுத்து வைக்கப்படுவார் என்ற விபரமும் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

கைதுசெய்யப்படும் அல்லது கட்டுக்காவலில் வைக்கப்படும் பெண்கள் அல்லது சிறுவர்களை இயன்றவரை முப்படையின் அல்லது பொலிஸ் பிரிவின் மகளிர் பிரிவின் பாதுகாப்பின் கீழ் வைக்க வேண்டும்.

கைதுசெய்யப்பட்டு 48 மணி நேரத்துக்குள் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு கைது விடயம் அறிவிக்கப்பட வேண்டும். மேற்படி அறிவுறுத்தல்கள் கடைப்பிடிக்கப்படாதவிடத்து, செயலாளர் இடர் முகாமைத்துவம் மற்றும் மனித உரிமைகள் அமைச்சு இல. 2, விஜேராம மாவத்தை, கொழும்பு (தொலை நகல் 01168 1980) அல்லது பிரதிப் பொலிஸ்மா அதிபர் (நீதீப் பிராந்தியம்) இலங்கை பொலிஸ் தலைமையகம், கொழும்பு -1 (தொலைநகல் 011238138 1394)க்கு முறைப்பாடு செய்யலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

# தொழிற்சங்கத்துடன் பேச்சுவார்த்தை கிடையாது என்கிறார் மங்கள சமரவீர

(கொழும்பு)

ஊழியர்களின் ஊதிய அதிகரிப்பு கோரிக்கை தொடர்பாக தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படமாட்டாது என்று துறைமுக சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். துறைமுக ஊழியர்கள் ஆரம் பித்துள்ள தொழிற்சங்க நடவடி க்கை குறித்துஆராய மூவர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இந்த துறைமுக ஊழியர்களின் தொழிற்சங்க நடவடிக்கையை முற்போக்காளர் எனக் கூறுவோர் பின்னணியில் நின்று முன்னெடுப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

துறைமுக ஊழியர்களுக்கு கடந்த வருடமும் ஊதிய அதிகரிப்பு வழங்கப்பட்டதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-9)

# நவீனமயப்படுத்தப்படும் பற்சிகிச்சைப் பிரிவு

(மருதங்கேணி)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையின் பற்சிகிச்சைப் பிரிவை நவீனமயப்படுத்தும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. இவையாவும் இரு வாரங்களில் முடிவடையும் என வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது எக்ஸ்றே பிரிவில் இயங்கி வரும் பற்சிகிச்சை பிரிவு வேலைகள் யாவும் முடிவுற்றதும் சொந்த இடத்திற்கு மாற்றப்படவுள்ளது. சில பற்சிகிச்சைப்பிரிவில் இரு பற்சிகிச்சை வைத்திய நிபுணர்கள் கடமையாற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-35)

# கர்மவீரர் காமராஜர்

## மீள்பார்வை

முருக-தனுஷ்கோடி

31



தீய்ந்து போன நிலங்களுக்கு நில வரிசையை வஜா செய்யவேண்டும் ரெட்டியாரின் இரண்டாவது நிபந்தனை இது.

இந்த இரண்டையும் அரசாங்கம் தான் செய்ய வேண்டும். அப்போது இருந்த குமாரசாமி ராஜா மந்திரி சபை இதை உடனடியாகச் செய்யாததால் ஒற்றுமைக்கான ராமசாமி ரெட்டியாரின் ஒத்துழைப்புக் கிடைக்காமல் போய்விட்டது.

1952 தேர்தல் நடந்தது. எதிர்பார்த்ததும் நடந்தது! காங்கிரஸ் கட்சிக்கு மெஜாரிட்டி கிடைக்கவில்லை.

1952 ஆம் ஆண்டு ஏப்ரல் 30ஆம் திகதி தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பதவிக்கு தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. குமாரசாமி ராஜா தலைவராக வரவேண்டுமென்று ராஜாஜி கூறினார். தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக டாக்டர் சுப்பராயன் வரவேண்டும் என்று காமராஜ் விரும்பினார். காமராஜ் விருப்பப்படி டாக்டர் சுப்பராயன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக டாக்டர் சுப்பராயன் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் கட்சி சம்பந்தப்பட்ட வேலைகளைக் காமராஜே முழு மூச்சுடன் கவனித்து வந்தார்.

சுயேச்சையாக நின்று வெற்றி பெற்றவர்களைக் கொண்டு மந்திரி சபையை அமைக்கலாம் எனப் பலர் முயற்சிகளை மேற்கொண்டனர். இந்த முயற்சியைக் காமராஜ் ஊக்குவிக்கவும் இல்லை. இதற்கு ஆதரவு தரவும் இல்லை.

இந்தத் தேர்தலில் குமாரசாமி ராஜா தோல்வியடைந்தார்.

## ராஜாஜி மந்திரி சபை-1952

அடுத்து யாரை முதல் மந்திரியாகக் கொண்டு வருவது என்ற பேச்சு பலமாகப் பரவலாகப் பேசப்பட்டது. ராஜாஜியையே முதல் மந்திரியாக்கினால் என்ன என்ற கருத்து எழுந்தது. ராஜாஜி முதல் மந்திரியாய் வருவதற்குக் காமராஜும் விரும்பினார். உடனே அவரும் சஞ்சீவரெட்டியும் ராஜாஜியைச் சந்தித்துப் பேசினார்கள். சட்டசபைக் காங்கிரஸ் கட்சிக்கு நீங்களே தலைவராய் வர வேண்டும் என்று காமராஜும் சஞ்சீவரெட்டியும் ராஜாஜியிடம் கூறினார்கள்.

அப்போது கல்கத்தாவில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது. காங்கிரஸ் கட்சி சென்னையில் மந்திரி சபை அமைக்க வேண்டும் என்று அகில இலங்கை இந்திய காங்கிரஸ் காரியக் கமிட்டி அப்போது தீர்மானம் நிறைவேற்றியது.

1952ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29ஆம் திகதி சட்டசபைக் காங்கிரஸ் கட்சிக் கூட்டம் நடைபெற்றது. தலைவரை தேர்ந்தெடுக்க இந்தக் கூட்டம் கூட்டப்பட்டது. சட்டசபைக் காங்கிரஸ் கட்சிக்குத் தலைவராக வரும்படி ராஜாஜியை அழைத்து இந்தக் கூட்டத்தில் தீர்மானம் போடப்பட்டது. சட்டசபை உறுப்பினர் கோஷ்டி ஒன்று தீர்மானத்தின் படி ராஜாஜியை சந்தித்துத் தீர்மானத்தை அவரிடம் கூறியது.

சட்டசபைக் காங்கிரஸ் தலைவராக நான் வருவது சம்பந்தமாக நேருஜியைக் கலந்து ஆலோசித்து விட்டு வாருங்கள் என்று ராஜாஜி அவர்களிடம் கேட்டுக்கொண்டார். அதன்பேரில் இரண்டு பேர் நேருஜியைச் சந்தித்துப் பேசினார்கள்.

சட்டசபைக் காங்கிரஸ் கட்சிக்கு தலைவரைத் தேர்ந்தெடுப்பது கட்சியின் கடமை, பொறுப்புமாகும். யாரைத் தேர்ந்தெடுத்தாலும் அதை நான் ஏற்றுக்கொள்கிறேன் என்று நேருஜி அவர்களிடம் கூறினார்.

இவ்வாறு தனது கருத்தைக் தெரிவித்த நேருஜி ஒரு நிபந்தனையையும் அந்த இருவரிடமும் கூறினார். சட்டசபைக் காங்கிரஸ் கட்சித் தலைவராக யாரைத் தேர்ந்தெடுத்தாலும் அவர் சட்டசபை உறுப்பினராக இருக்கவேண்டும் என்பதே நேருஜியின் நிபந்தனை. தற்போது சட்டசபை உறுப்பினராக இல்லாதவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர் விரைவில் சட்டசபைத் தேர்தலில் நிற்க வேண்டும் எனவும் நேருஜி அவர்களிடம் விளக்கினார்.

1952ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி சட்ட சபைக் காங்கிரஸ் கட்சிக் கூட்டம் நடைபெற்றது. தலைவர் பதவிக்கு ராஜாஜியின் பெயரை காமராஜ் முன்மொழிந்தார். சஞ்சீவரெட்டி, ஷெட்டி, குட்டியம்மாளு அம்மாள் ஆகியோர் வழிமொழிந்தனர். ராஜாஜி தேர்ந்தெடுக்கப்பட்டுத் தீர்மானம் நிறைவேறியது.

இதற்கிடையில் ராஜாஜியை மேல்சபை உறுப்பினராகக் குமாரசாமி ராஜா சிபாரிசின் பேரில் கவர்னர் நியமித்துவிட்டார். ராஜாஜி இவ்வாறு மேல்சபை உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டது. ராஜாஜியின் பெயரை முன்மொழிவதற்கு முன்னதாகக் காமராஜுக்குத் தெரியாது.

தெளிவாய், விளக்கமாய் நேருஜி எவ்வளவோ கூறியும் (தலைவராக பதவி ஏற்பவர் சட்டசபை உறுப்பினராகத் தான் இருக்கவேண்டும் என்பது) இதுபோல நடந்து விட்டதே என மிகவும் வருந்தினார் காமராஜ். பின்னர் சட்டசபை காங்கிரஸ் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ராஜாஜி மந்திரி சபையை அமைத்தார்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் தேர்தல் மீண்டும் 1952ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் திகதி நடந்தது. தலைவராகப் பக்தவத்சலம் வரவேண்டும் என்று ராஜாஜி சொல்லி அனுப்பினார். அப்போது காமராஜ் தானே தேர்தலில் நிற்கப் போவதாக அறிவித்தார். தலைவரைத் தேர்ந்தெடுக்கும் கூட்டத்துக்குக் கூட ராஜாஜி வரவில்லை. கூட்டத்தில் தலைவர் பதவிக்கு காமராஜ் பெயர் முன்மொழியப்பட்டது. வேறு யாரும் போட்டியிட முன்வரவில்லை. ஆகவே காமராஜ் மீண்டும் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### *வீரம் இருந்தால் துப்பாக்கியால் சுடு!*

1940 ஆம் ஆண்டிலிருந்து காமராஜ் தமிழ்நாட்டில் ஒரு பெரும் சக்தியாகவே வளர்ந்தார். எப்போதும் அவர் ஏழைகளின் கட்சியிலேயே இருந்தார். 1940ஆம் ஆண்டுக்குப் பின் தான் காம ராஜ் ராஜாஜி மோதல் அதிகமாகியது. அப்போதும் கூட ராஜாஜியைச் சந்தித்துப் பேசத் தவறுவதில்லை. ராஜாஜியின் கோஷ்டியைச் சேர்ந்தவர்களிடம் கூட மனம் விட்டு பேசுவார். அந்தக் காலகட்டத்தில் கூட காமராஜ் கோபம் அடைவதை நான் பார்த்ததில்லை.

தமிழ் நாட்டில் அப்போது ஒரு புரட்சியே நடந்தது எனக் கூறலாம். அந்தப் புரட்சியின் மொத்த உருவமாகக் காமராஜே திகழ்ந்தார். மாறுதலை வேண்டியவர்களின் கருத்தும் விருப்பமும் காமராஜ் மூலமே வெளியாயின. மக்களிடம் நெருங்கிய தொடர்பு வைத்திருந்ததால் அவர்களிடம் ஏற்பட்ட மாறுதலைக் காமராஜ் ஒருவரே நன்குணர்ந்தார். உண்மையான தமிழ்நாட்டைக் காமராஜ் மூலமே அறிய முடியும் என்ற நிலைமை ஏற்பட்டது. ஏனெனில் எல்லாக் கிராமங்களையும் அங்குள்ள முக்கியமானவர்களையும் அவர் நேரில் தெரிந்து வைத்திருந்தார்.

(தொடரும்)

## மெல்லக் கற்கும் மாணவர் பற்றிய ஆய்வு

(கோண்டாவில்)

சாந்திகம் உளவளத்துணை நிலையத்தினரால் மெல்லக் கற்கும் மாணவர்கள் உருவாகும் காரணங்களை கண்டறிவதற்கான ஆய்வு ஒன்று உடுவில் கல்விக் கோட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

இராமநாதன் மகளிர் கல்லூரி, இணுவில் இந்துக்கல்லூரி ஆகிய கல்லூரிகளில் தரம் 3இல் கல்வி கற்கும் மாணவர்களிடையே ஒத்த உருக்களை இனங்காணும் முறை,

அவற்றுக்கான விளக்கங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட பாடத் திட்டத்திற்கு அமைவாக மெல்லக் கற்கும் மாணவர்கள் தொடர்பான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருவதாக சாந்திகம் உளவளத் துணை நிலைய மாணவன் ச. நிமலன் தெரிவித்துள்ளார்.

(து-36)

## மஹோற்சவம்

ஏழாலையம்பதி அருள்மிகு புங்கடி புவனேஸ்வரி அம்பிகை ஆலய மஹோற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

மஹோற்சவங்களில் 26ஆம் திகதி புதன்கிழமை சப்பறத்திருவிழாவும், 27ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (அ-49)

## ஏகாதசி உற்சவம்

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீவல்லிபுர நாதர் தேவஸ்தானத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு ஏகாதசி உற்சவம் இடம்பெறவுள்ளது. தொடர்ந்து பூதேவி ஸ்ரீதேவி சமேத நாராயணப் பெருமான் உள் வீதிவலம் வரும் திருக்காட்சியும் இடம்பெறும். (து-36)

## வேலணை மத்திய கல்லூரி நவோதய வார நிகழ்வுகள்


நவோதய வாரத்தை ஒட்டி வேலணை மத்திய கல்லூரியில் இடம்பெறும் நவோதய நிகழ்வுகள் கல்லூரி அதிபர் பொ. அருணகிரிநாதனின் தலைமையில் சிறப்புடன் இடம்பெற்று வருகின்றன.


யூலை 15,16ஆம் திகதிகளில் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரும் ஒன்றிணைந்து பாடசாலை சூழலை கவின்நிலைப்படுத்தும் சிரமதான நிகழ்வில் கலந்துகொண்டனர்.

யூலை 17ஆம் திகதி இடம்பெற்ற சமய விழுமிய தின நிகழ்வில் ஆன்மீக சொற்பொழிவாளர் கு. பாலசண்முகன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். தொடர்ந்து இடம்பெற்ற கணித, விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப தினமான இரண்டாம் நாள் நிகழ்வில் யாழ். கல்விவலய விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர் ஞ. ரட்ணசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

மூன்றாம் நாள் நடைபெற்ற மொழித்திறன் விருத்தி தினத்தில் தீவக வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் (தமிழ்) சரவணபவானந்தன் பிரதம விருந்தினராக வருகை தந்து விழாவை சிறப்பித்தார். இறுதி இரு நாட்களும் விளையாட்டு உடல்நல தினம் மற்றும் மாணவர் ஆக்க வெளிப்பாட்டு தினம் என்பன கொண்டாடப்படுகிறது. மேற்படி நிகழ்வுகளில் மாணவர்களின் பல்வேறு கலை நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். (அ)







கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் கொண்டாடப்படும் நவோதயா பாடசாலை வார நிகழ்ச்சியில் யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய நவோதயா பாடசாலையில் கடந்த 15,16ஆம் திகதிகளில் நடைபெற்ற மாபெரும் சிரமதான பணிகளில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் ஆகியோர் இணைந்து பணிகளை மேற்கொண்டமையை படங்களில் காணலாம்.

# லெபனானில் தொடரும் குண்டுவீச்சு 5 இலட்சம் பேர் வெளியேற்றம்

லெபனான் மீது இஸ்ரேல் ஒரே நாளில் 23 டன் குண்டுகளை வீசியது. லெபனான் மீது போர் தொடுத்துள்ள இஸ்ரேல் 9ஆவது நாளாக நேற்றும் பல இடங்களில் தாக்குதலை நடத்தியது. உலகில் பல நாடுகள் எதிர்ப்பு தெரிவித்த போதிலும் அதை பொருட்படுத்தாமல் தினமும் தாக்கி வருகிறது.

அந்த பகுதியில் மட்டும் ஒரே நாளில் 23டன் குண்டுகள் வீசப்பட்டன. அதேபோல ஏவுகணை மூலம் தாக்கி முக்கிய கட்டடங்களை தகர்த்தனர். இஸ்ரேல் தாக்குதலில் இதுவரை இறந்தவர்களின் எண்ணிக்கை 320ஐ தாண்டி உள்ளது. இதனால் பீதி அடைந்த மக்கள் பெய்ரூட் நகரை காலி செய்துவிட்டு வெளியேறி வருகின்றனர். அவர்கள் கிடைத்த வாகனங்களில் ஏறி நகரை விட்டு வெளியேறி இருக்கிறார்கள். இதுவரை 5 இலட்சம் பேர் வெளியேறிய வண்ணம் இருப்பதாக அரசு தகவல்கள் தெரிவிக்கின்றன.




லெபனான் நாட்டில் வசிக்கும் அனைத்து வெளிநாட்டினரையும் வெளியேறுமாறு லெபனான் உத்தரவிட்டுள்ளது. அங்கு 12 ஆயிரம் இந்தியர்கள் வசிக்கின்றனர். அவர்களை பத்திரமாக வெளியேற்ற இந்தியா 4 போர் கப்பல்களை அனுப்பியுள்ளது. இதில் ஒரு கப்பல் பெய்ரூட்துறை முகத்தை அடைந்துள்ளது. மற்ற 3 கப்பல்களும் நடுக்கடலில் நிற்கின்றன. 2 அல் லது 3 நாட்களில் அவர்களை கப்பலில் ஏற்றி வர முடிவு செய் துள்ளனர்.

இஸ்ரேல் இராணுவ வீரர்கள் 2 பேரை ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் கடத்தி சென்றதால் தான் இந்த தாக்குதல் நடக்கிறது. இதற்கிடையே இந்த இயக்கத்தில் மூத்த தலைவர் நசருல்லா உட்பட முன்னணி தலைவர்கள் பெய்ரூட் நகரத்தின் தெற்கு பகுதியில் பதுங்கு குழிக்குள் இருப்பதாக இஸ்ரேலுக்கு தகவல் கிடைத்தது.

இதனால் 12 விமானங்கள் அந்த இடத்தை சுற்றிவளைத்து சரமாரியாக குண்டு வீசின.

இதேபோல மற்ற வெளிநாட்டுகாரர்களும் வெளியேறி வருகிறார்கள். இதற்காக அந்த நாடுகளும் விமானம் மற்றும் கப்பல்களை அனுப்பியுள்ளன. அங்கு அதிகபட்சமாக கனடா நாட்டினர் 40 ஆயிரம் பேர் வசிக்கின்றனர். பிலிப்பைன்ஸ் நாட்டினர் 30 ஆயிரம் பேரும், அவுஸ்திரேலிய நாட்டினர் 25 ஆயிரம் பேரும், இங்கிலாந்து நாட்டினர் 22 ஆயிரம் பேரும் வசிக்கின்றனர். (அ)



மத்திய ஜப்பானில் கடும் மழை பெய்ததால் ஒரு வீட்டை சுற்றிலும் சூழ்ந்திருக்கும் வெள்ளம்

# சதாம் வழக்கு நடுவர் மன்றத்துக்கு புதிய தலைவர் நியமனம்

(பக்தாத்)

ஈராக் முன்னாள் அதிபர் மீதான புகார்களை விசாரிக்கும் சிறப்பு நடுவர் மன்றத்துக்கு புதிய தலைவர் நியமிக்கப்பட்டுள்ளார். சதாம் ஆட்சி புரிந்தபோது அவரது ஆட்சியில் முக்கிய பொறுப்பு வகித்த 2 உறுப்பினர்களுக்கு எதிரான புகார்கள் குறித்தும் இந்த நடுவர் மன்றம் விசாரிக்கிறது.

இதன் புதிய தலைவராக நீதிபதி அரீப் ஜாகின் நியமிக்கப்பட்டுள்ளார். வேறு எந்த தகவலையும் ஜாகின் குறித்து நடுவர் மன்றம் அறிவிக்கவில்லை. 2004 ஆகஸ்டில் இந்த நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது. இதற்கு தலைவராக ஜமால் முஸ்தபா பதவி வகித்துவந்தார்.

புற்றுநோய் காரணமாக அண்மையில் முஸ்தபா இறந்தார். ஈராக் உச்ச நீதிமன்றத்தின் தலைவராகவும் ஜாகின் செயல்படுவார்.

2003 ஏப்ரலில் சதாம் அதிபர் பதவியை இழந்தார். சதாமை கொல்ல நடந்த முயற்சியை அடுத்து பக்தாத்தின் வடக்கே உள்ள துஜைல் நகரில் 148 ஷியா பிரிவினர் 1982இல் படுகொலை செய்யப்பட்டனர்.

இது சதாமின் உத்தரவின் பேரில் நடந்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இது தொடர்பாக சதாம் மற்றும் 7 பேரிடம் விசாரணை நடத்தப்படுகிறது. துஜைல் சம்பவ வழக்கை விசாரிக்கும் நீதிபதிகளில் ஜாகின் இடம்பெறவில்லை. (அ)

# உறவு மேம்பட பழயவற்றை மறக்கவேண்டும் பாகி.வெளியுறவு அமைச்சர் கசூரி தெரிவிப்பு

அமைதிபேச்சு மற்றும் இரு தரப்பு உறவுகளில் முன்னேற்றம் ஏற்பட வேண்டும் எனில் சியாச்சின் மற்றும் கார்கில் பிரச்சினைகளை இந்தியா பாகிஸ்தான் நாடுகள் மறந்து விட வேண்டும் என பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் குர்ஷித் முகமது கசூரி தெரிவித்துள்ளார். மும்பை தொடர் குண்டுவெடிப்பை அடுத்து பாகிஸ்தான் உடனான அமைதி பேச்சுவார்த்தையை இந்தியா ஒத்திவைத்துள்ளது. முன்னதாக பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் முகமது கசூரி மும்பை தொடர் குண்டுவெடிப்பு சம்பவத்தோடு காஷ்மீர் பிரச்சினையைத் தொடர்புபடுத்தி காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வுகாண இதுவே தக்க தருணம் என்று கூறினார். கசூரியின் தான்தோன்றித்தனமான கருத்துக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்தது. இந்நிலையில், செய்தி நிறுவனம் ஒன்றுக்கு முகமது கசூரி பேட்டி அளித்துள்ளார். இதில் அவர் கூறியிருப்பதாவது,

அமைதி பேச்சுவார்த்தை பாகிஸ்தானுக்கு சாதகமாக இருப்பது போன்று காட்டும் இந்தியாவின் அனுமானம் தவறானது. அமைதி முயற்சிகள் இந்தியா, பாகிஸ்தான் மட்டு மன்றி சார்க் நாடுகள் ஆசியா முழுவதற்கும் நல்லது. பேச்சுவார்த்தையை நிறுத்தியது எதிர்மாறான வளர்ச்சி. மும்பை குண்டுவெடிப்பு குறித்து இந்தியா உறுதியான ஆதாரங்களைத் தந்தால் அது தொடர்பான விசாரணையில் உதவ தயாராக இருக்கிறோம். வேறு எதை இந்தியா எதிர்பார்க்கிறது உறுதியான ஒரு பெயரைக்கூறினால், நாங்கள் மேற்கொண்டு நடவடிக்கை எடுப்போம். கடந்த ஆண்டு லண்டன் குண்டுவெடிப்பு விசாரணையில் கூட நாங்கள் உதவினோம்.

இந்த விஷயத்தில் பாகிஸ்தான் வசதியாக பலிகடா ஆக்கப்பட்டுள்ளது. இது நீண்டகாலம் நீடிக்காது ஏனெனில் தற்போதைய சூழ்நிலையில் தீவிரவாதத்துக்கு எதிரான போர் மிகவும் அவசியம் கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்தியா பாகிஸ்தான் இடையில் நடைபெறும் ஒவ்வொரு அமைதி முயற்சிக்கு முன்பும் ஒரு குண்டுவெடிப்பு நிகழ்ந்து வருகிறது. அமைதி முயற்சிகளை அவர்கள் (தீவிரவாதிகள்) உறுதியாக எதிர்க்கின்றார்கள் என்பதே இதற்கு அர்த்தம்.


இந்தியா கார்க்கிலைப் பற்றி பேசினால், பாகிஸ்தான் சியாச்சினைப் பற்றி பேச நேரிடும். இந்த கதை முடிவே இல்லாமல் தொடரும் நிலை ஏற்படும் வர லாற்றின் முந்தைப் பகுதிக்குச் செல்ல யாரும் முயற்சிக்கக்கூடாது. வரலாற்றில் இருந்து பாடம் கற்றுக்கொள்ள வழிகள் இருந்தால், அது நல்லது. ஆனால் வலுக்கட்டாயமாக சிலவற்றை வரலாற்றில் திணிக்க முயல்வது சாதகமானது அல்ல. நல்லுறவு மற்றும் அமைதி பேச்சுக்கள் தொடர வேண்டும் என நாம் விரும்பினால் சியாச்சின் மற்றும் கார்கிலை இந்தியாவும் பாகிஸ்தானும் மறக்க வேண்டும்.

கார்கில் பிரச்சினையை மீண்டும் எழுப்புவதன் மூலமாக அதிபர் முஷாரப் புகழை களங்கப்படுத்த சிலர் முயற்சிக்கின்றனர். கார்கில் குறித்து அடுத்த நாட்டின் பிரதமர் கூறிய பிறகே தனக்குத் தெரியும் என ஒரு பிரதமர் கூறினால் அவர் அந்த பதவியில் இருக்கவே தகுதி அற்றவர். (கார்கில் போர் குறித்து அப்போதைய இராணுவ தளபதி முஷாரப் உடன் பிரதமர் நவாஸ் ஷெரீப் ஆலோசனை நடத்தும் புகைப்படங்களைக் காட்டினார்).

லஷ்கர்-இ-தொய்பா மற்றும் இதர சில அமைப்புகளை நாங்கள் தடை செய்துவிட்டோம். அவர்களுக்கு இடையிலான கடும் மோதல்கள் காரணமான சிலர் புதிய அமைப்புகளைத் தோற்றுவித்துள்ளனர். அதிபர் முஷாரப் மற்றும் அவரது அரசை உலகம் ஏற்றுக் கொண்டுள்ளது. எனவே நாங்கள் ஏன் லஷ்கர்-இ-தொய்யா போன்ற அமைப்புகளுக்கு ஆதரவு தரவிரும்ப வேண்டும். பாகிஸ்தான் நவீன முஸ்லிம் நாடாக மாறவேண்டும் என்பதே எங்களது விருப்பம்.

இவ்வாறு முகமது கசூரி கூறினார். இந்திய எல்லைக்குள் இருக்கும் சியாச்சின் மலைப்பகுதி, தங்கள் நாட்டிற்குச் சொந்தமானது என பாகிஸ்தான் வலியுறுத்தி வருகிறது. பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரிப் கடந்த 1999இல் கார்கில் போர் ஏற்பட அப்போதைய இராணுவ தளபதியும் தற்போதைய அதிபருமான முஷாரப்பே காரணம். இந்திய பிரதமர் வாஜ்பாய் என்னிடம் டெலிபோனில் விசாரித்த பிறகு தான் எனக்கே அந்த தகவல் தெரியும் என்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

உலக தரிசனம்



இஸ்ரேல் நகரான ஹைபாவில், ஹிஸ்புல் தீவிரவாதிகள் தாக்கியதில் காயமடைந்த இஸ்ரேலிய ராணுவ வீரர் ஒருவரை சிகிச்சைக்காக ஆஸ்பத்திரி கொண்டு செல்கிறார்கள்

# கற்பழிப்பில் ஈடுபட்ட மூவருக்கு தூக்கு

(லாகூர்)

பாகிஸ்தானில் உள்ள ஷேக்கப்புரா நகரில் வசிக்கும் 3 பேர் சேர்ந்து ஒரு பெண்ணை கடந்த 2000ஆம் ஆண்டு கற்பழித்தனர். அவர்களை பொலிஸார் கைதுசெய்து கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தனர். கோர்ட்டு அவர்களுக்கு மரணதண்டனை விதித்து இந்தத் தண்டனையை எதிர்த்து அவர்கள் அப் பீல் செய் தனர். இந்த அப்பீல் மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன.

ஜனாதிபதிக்கும் அவர்கள் கருணை மனு தாக்கல் செய்தனர். அதையும் ஜனாதிபதி தள்ளுபடி செய்தார். இதைத் தொடர்ந்து இந்த 3 பேருக்கும் தூக்குத்தண்டனை நேற்று முன்தினம் லாகூர் சிறையில் நிறைவேற்றப்பட்டது. (அ)

இன்புற்று வாழும் சமுதாயமே மனித வளர்ச்சியின் முடிவான குறிக்கோள்.

-டாக்டர் இராதாகிருஷ்ணன்

வலம்புரி

# சோதனைக் கெடுபிடியால் இயல்பு வாழ்க்கை முடக்கம்

நாடு என்பது எப்படியிருக்க வேண்டும் என்பதை பொய்யாமொழிப் புலவர் அழகாக எல்லைப்படுத்தியுள்ளார்.

உலகிலேயே நாடு என்பதற்கு வகை கூறிய பெருமை அவரையே சாரும். பத்துக் குறள்களில் இருபது அடிகளில் நாட்டின் சிறப்புப் பற்றிக் கூறிய அதே பொய்யா மொழிப் புலவன் ஆட்சி பற்றியும் மன்னனின் இயல்பு பற்றியும் கூறத் தவறவில்லை.

நாடு சிறப்பாக இருக்க வேண்டுமாயின் நீதிநெறி வழுவாத ஆட்சி தேவை. நீதிநெறி எந்தவொரு நாட்டில் பேணப்படுகின்றதோ அந்த நாடே 'நாடு' என்ற பெட்டகத்தை பிரதிநிதித்துவம் செய்யும்.

மற்றவையெல்லாம் அடவிக்காடாகவே கொள்ளப்படும். இது வள்ளுவர் கண்ட வரையறை. இதில் இருக்கக் கூடிய உண்மைகளை உணர்வதற்கு நீதி நூல்களை -அற நூல்களை ஆட்சியாளர்கள் கற்றுணர வேண்டும்.

செய்வதெல்லாம் நீதியின் பாற்பட்டதென கருதப்படுவது ஆட்சியாளர்களுக்கு அழகல்ல. இதற்கு இலங்கை ஆட்சி முறைமை நல்லதோர் உதாரணமாகும்.

பெரும்பான்மையினம் ஆள வேண்டும். பெரும்பான்மையினத்திற்குரிய மதம் அரச மதமாகப் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக சிறுபான்மையினத்தின் உரிமைகளைப் பறிப்பது, அவர்களை அடிமைகளாக நடத்த முற்படுவது, அவர்களின் வாழ்வாதாரங்களைப் பறிப்பது இவையெல்லாம் இலங்கையில் நடந்து கொண்டிருக்கும் நிகழ்வுகள்.

இவை நீதியின்பாற்பட்டதல்ல. ஒரு நாட்டில் வாழும் எல்லா இன மக்களும் அனைத்து மொழிகளும் இருக்கக் கூடிய சமயங்களும் சமமானவை என்பதை ஆளும் தரப்பு ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இதில் ஏற்படக் கூடிய புரள்வுகளும் மயக்கங்களும் நீண்ட காலத்தில் பெரும்பான்மையினத்தின் நிம்மதிக்கு ஆபத்தாகிவிடும்.

அந்த விளைவையே நாடு இப்போது அனுபவிக்கின்றது. இருந்தும் கொண்ட கொள்கையை மாற்றுவதில் அரசுக்கு இன்னமும் உடன்பாடு இல்லை.

இதன் காரணமாக இன்று நாடு முழுவதிலும் சோதனைக் கெடுபிடிகள், யாரையும் சந்தேகக் கண் கொண்டு பார்க்கும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக இன்று நாடு பூராகவும் படையினர் குவிக்கப்பட்டு சந்திக்குச் சந்தி காவலரண்கள் அமைத்து மக்களை சோதிக்கும் அவல நிலை அனைத்து இன மக்களின் இயல்பு வாழ்க்கையை குழப்பிவிட்டுள்ளது.

நாட்டில் பாதுகாப்பு என்ற பெயரில் நடத்தும் இந்த அவல நிலை ஏன் எதற்காக என்று ஒரு கணம் சகலரும் சிந்திப்பார்களாயின் உண்மையை உணர முடியும்.

மக்களை அவலப் படுத்துவது, அவர்களின் இயல்பு வாழ்க்கையை மோசமாக்குவது என்பன சோதனைக் கெடுபிடிகளின் ஊடே நடக்கின்ற போதிலும் அதுபற்றி ஜனாதிபதியோ அன்றே அரசோ இம்மியும் கவலை கொள்வதாகவில்லை.

இதனால் மக்கள் படும்பாடு போதும் என்றாகிவிட்டது. ஆட்சியாளர்கள் தமது பதவியை காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கில் மட்டும் செயற்படும் போது மக்கள் அல்லல் படுவது தவிர்க்க முடியாததே.

இவ்வாறு அவலங்கள் தொடர்வதைத் தொடர்ந்தும் பார்த்திருப்பது மக்களின் கடமையுமன்று. ஆட்சியாளர்கள் தமது கடமையை செம்மையாகச் செய்யவில்லையாயின் அதைத் தட்டிக் கேட்க வேண்டிய - திருத்த வேண்டிய பொறுப்பு பொதுமக்களினதுடையது என்பது நினைவில் கொள்ளத்தக்கது.

# சபையைத் திசைதிருப்ப பிரதி நிதியமைச்சர் முயற்சி சிறப்புரிமை மீறலெனச் சபையில் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பாராளுமன்றத்தைத் திசைதிருப்பும் வகையில் கருத்து வெளியிட்டமை தொடர்பாக பிரதி நிதியமைச்சர் றஞ்சித் சியாம்பலப்பிட்டியவிற்கு எதிராக ஐக்கிய தேசியக்கட்சி நேற்று பாராளுமன்றத்தில் சிறப்புரிமை தொடர்பாக கேள்வியெழுப்பியது.

2002,2003ஆம் ஆண்டுகளுக்கு பின்னர் நிதி முகாமைத்துவத்தின் பலவீனத்தால் பொருட்களின் விலை நாளாந்தம் அதிகரிப்பதாக தம்மால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கு சபையைத் திசைதிருப்பும் வகையிலான ஒரு பதிலை பிரதிநிதியமைச்சர் முன்வைத்ததாக எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார்.

2005ஆம் ஆண்டு யூலை மாதமளவில் வருடாந்த பணவீக்கம் நூற்றுக்கு 12.5 வீதமாக இருந்ததை குறைந்த மதிப்பீட்டை காண்பிப்பதாக பிரதிநிதியமைச்சர் தெரிவித்ததாக அவர் சுட்டிக்காட்டினார்.

அந்தக் கூற்று சபையை திசை திருப்புவதான முயற்சி என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான அமைப்பாளர் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை அதிகரிப்பால் வாழ்க்கைச் செலவுப் பிரச்சினை அதிகரித்துள்ளதாக பாராளுமன்றத்தையும் நாட்டையும் திசை திருப்பும் வகையிலான ஒரு கருத்தை பிரதிநிதியமைச்சர் வெளியிட்டுள்ளார்.

இதன்மூலம் பிரதிநிதியமைச்சர் உண்மையை மூடி மறைத்துள்ளார். கடந்த யூன் மாதம் 7 ஆம்திகதி பாராளுமன்றத்திற்கு தெரிவித்த கருத்துக்களின் படிதிட்டமிட்டு உண்மையை மறைக்க முயற்சிப்பது தெளிவாகின்றது.

இதன்மூலம் பாராளுமன்றங்களின் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதால் அதனை பாராளுமன்ற செயற்குழுவின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று ஐக்கிய தேசியக் கட்சி கேட்டுக் கொண்டுள்ளது. இது தொடர்பாக ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுப்பதாக சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம். லொக்குபண்டார தெரிவித்தார். (கு-9)

# லெபனானிலுள்ள இலங்கையர்களை திருப்பி அழைத்துவர நடவடிக்கை

(கொழும்பு)

லெபனானிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் கூடியுள்ள இலங்கையர்களை நாட்டிற்கு அழைத்து வர நடவடிக்கை எடுத்துவருவதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

லெபனானில் மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்களையடுத்து அங்கு தொழில் புரியும் இலங்கையர்கள் இலங்கைத் தூதரகத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

இவ்வாறு தஞ்சமடைந்தவர்களை இலங்கைக்கு அழைத்துவர சிறிலங்கா விமான சேவையின் விமானமொன்றை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெளி விவகார அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் இரு தினங்களில் அவர்களை இலங்கைக்கு அழைத்து வரவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

மேலும் லெபனானிலுள்ள இலங்கையர்களை திருப்பி அழைப்பதற்கு இந்தியா, அமெரிக்கா, இத்தாலி ஆகிய நாடுகளின் உதவியைப் பெற்றுக் கொள்ளவும் எதிர்ப்பதாக அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (கு-9)

# 160 ஆண் தாதியர் நியமனம்

(கொழும்பு)

2000ஆம் ஆண்டுமுதல் 2004ஆம் ஆண்டுவரையில் சுகாதார சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட பெண் தாதிமாரின் விகிதாசாரத்துக்கு ஏற்றவாறு 160 ஆண் தாதியர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இதன்படி கடந்த காலங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் படி க.பொ.த உயர்தரத்தில் இஸட் ஸ்கோர் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பட்டியலிலுள்ள 160 பேர் உடனடியாக ஆண் தாதியர்களாக பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

தாதியர் சேவைகள் சட்டத்தின் பிரகாரம் சேவையிலுள்ள தாதியரில் 5வீதமானோர் ஆண் தாதிகளாக இருத்தல் வேண்டும்.

இந்த வீதம் பாதிக்கப்படாதவாறு ஏற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பப் படிவங்களிலிருந்து 160பேர் மட்டும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

ஆண் தாதிமார் விசேடமான பகுதிகளுக்கே சேவைக்கு அமர்த்தப்படுகின்றனர். குறிப்பாக ஆஸ்பத்திரிகளிலுள்ள அங்கவீனர்கள், மனநிலை பாதிக்கப்பட்டவர்கள், மதகுருமார் முதலியவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ள வார்ட்டுக்களிலேயே இவர்கள் கடமைக்கு அமர்த்தப்படுவர்.

இதனை நிபந்தனையாகக் கொண்டே நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

ஆண் தாதிமார் சேர்த்துக் கொள்ளப்படவேண்டிய விகிதாசாரம் குறித்து முழு அளவிலான கணக்கெடுப்பு நடத்தப்பட்டு தேவையான ஆண் தாதியர்கள் மேலும் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். (கு-9)

## காணாமல் போனோர் தொடர்பான 2000 முறைப்பாடுகள்

# கைவிடும் தீர்மானத்துக்குக் கண்டனம்

(கொழும்பு)

இலங்கையில் காணாமல் போனோர் தொடர்பான 2000 முறைப்பாடுகளை கைவிடும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முடிவுக்கு ஆசிய மனித உரிமைகள் ஆணையம் கண்டனம் தெரிவித்துள்ளது.

சர்வதேச அளவில் காணாமல் போதல் சம்பவங்களை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில் இலங்கை மனித உரிமைகள் ஆணையத்தின் இத்தகைய பகிரங்க அறிவிப்பானது ஆச்சரியமளிக்கிறது.

காணாமல் போனோர் தொடர்பான விசாரணைகளை தொடரும் நிலையில் நட்டஈடு உள்ளிட்டவைகளுக்கு முகம் கொடுக்க வேண்டும் என்பதற்கான விசாரணைகளை நிறுத்துவதாக அறிவித்துள்ளது.

இந்நிலைப்பாட்டை எந்த ஒரு சட்டத்தின் கீழும் தார்மீக ரீதியாகவும் நியாயப்படுத்தவே முடியாது இலங்கை ஒப்புக் கொண்ட மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கான சர்வதேச சட்டவிதிமுறைகளுக்கு எதிரானது இது தற்போதைய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் அரசியல் யாப்பின் கீழ் நியமிக்கப்பட்ட நிலையில் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்றும் ஆசிய மனித உரிமைகள் ஆணையம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

# நவோதயா வார நிறைவு நாள் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய நவோதயா வார நிறைவு நாள் நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை பகல் 12.00 மணிக்கு வித்தியாலய அதிபர் வி.மாணிக்கம் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலயப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் கலந்துகொள்வார். இன்றைய நிகழ்வுகளாக மங்களவிளக்கேற்றல், இறைவணக்கம், நவோதயா கீதம், வரவேற்புரை, அதிபர் ஆசியுரை, பிரதம விருந்தினர் உரை, செல்வி எஸ்.கலைவாணியின் தமிழ்பேச்சு, ஆங்கிலப்பேச்சு, வித்தியாலய இசைத்துறை மாணவரின் குழு இசை, நடனத்துறை மாணவரின் நடன நிகழ்ச்சி, பாடசாலை பழைய மாணவர் சங்க உப தலைவர் எஸ்.ரி.பத்மநாதனின் நன்றியுரை, கல்லூரிக் கீதம் ஆகியன இடம்பெறவுள்ளன. (கு)

# காலாவதியான மருந்து விற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் ஐந்து தனியார் மருத்துவ நிலையங்கள் கடந்த வெள்ளிக்கிழமையன்று சீல்வைத்து மூடப்பட்டதாக யாழ்ப்பாண உணவு மற்றும் மருந்துப் பொருட்கள் பரிசோதகர் ரி.மகாதேவன் தெரிவித்தார். சீல் வைத்து மூடப்பட்ட இந்த ஐந்து மருத்துவ நிலையங்களிலும் காலாவதியான மருந்துப் பொருட்கள் வழங்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டதையடுத்தே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அரசாங்க சுகாதார துறையினர் திடீர் பரிசோதனையின் போது இந்த ஐந்து தனியார் மருத்துவ நிலையங்களிலும் காலாவதியான மருந்துப் பொருட்கள் வழங்கியது கண்டுபிடிக்கப்பட்டதையடுத்தே இந்த ஐந்து தனியார் மருத்துவ நிலையங்களும் சீல் வைத்து மூடப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-7)

# சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்காக தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நிதி

(கொழும்பு)

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்காக 20 வயது இளைஞருக்கு மூன்று இலட்சத்து பதினையாயிரம் நிதி நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக்கழக நடுவப்பணியகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் 2.00மணிக்கு நடந்த இந்நிகழ்வில் இளைஞனின் தாயாரான திருமதி மரியம்மா கருணாகரனிடம் கழகத் தலைவர் வே. சிவனடியார் இப் பணத்தைக் கையளித்தார்.

இதில் வெளிநாட்டு தொடர்பகப் பணிப்பாளர் சீ.பரமேஸ்வரனும் கலந்துகொண்டார். கிறேசரடி நாவற்குளம் ,ஓமந்தை வவுனியாவைச் சொந்த முகவரியாகவும் இல69 பூங்கா வீதி வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட கருணாகரன் ராஜ்குமார் வயது 20 என்ற இளைஞரின் சிறிநீரக மாற்றுச் சிகிச்சைக்காகவே இந்த உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.


கூலித் தொழிலாளியான கருணாகரனின் பொருளாதார நிலையைப் பொறுத்த வரையில் இப் பெருந்தொகைப் பணத்தைச் செலவு செய்து தனது மகனுக்கு சிகிச்சையளிக்க முடியாது என்ற நிலைமையைக் கருத்திற்கொண்டு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தனது விசேட மருத்துவ உதவித்திட்டத்தின்கீழ் இந்நிதியினை நன்கொடையாக வழங்கியுள்ளது.

நோயாளியான செல்வன் ராஜ்குமார் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம்(O/L) வரை பயின்றுவிட்டு அப்பிள் பழ வியாபாரம் செய்யும் தொழிலையே மேற்கொண்டு வந்தார்.

லண்டனில் புலம் பெயர்ந்து வாழும் சுதன் என்பவரின் புதல்வியான செல்வி. தமிழ்த்தேன் மற்றும் கிருபா என்ப வரின் புதல்வியான செல்வி கிருத்திகா ஆகியோரின் பிறந்த நாளை முன்னிட்டு லண்டன் வெண்புறா நிறுவனத்திற்கூடாக இந் நிதித் தொகை வழங்கப்பட்டுள்ளது. (அ)

## தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்



ஊஞ்சலை ஆட்டிவிட்டால் மேலும் கீழும் ஆடுகிறது. ஆட்டாவிட்டால் அப்படியே நிற்கிறது. அதேபோல் உலக ஆசைகளால் மனம் அலைக்கழிக்கப்படுகிறது. ஆசை இல்லாத மனம் ஸ்திரமாக ஆண்டவன் பாத கமலங்களில் நிற்கிறது.

சுவாமி விவேகானந்தர்

# கடற்படை வாகனம் மோதியதில் ஏழு பொதுமக்கள் படுகாயம்

(கொழும்பு)

திருகோணமலையில் அதிவேகமாகச் சென்ற கடற்படையின் வாகனத் தொடரணி பொதுமக்கள் வாகனம்மீது மோதியதில் வெளிநாட்டுப் பெண் ஒருவர் உட்பட 7 பேர் படுகாயமடைந்தனர்.

திருகோணமலை உள்துறைமுக வீதியில் நேற்று மாலை 4 மணிக்கு இச் சம்பவம் நடந்தது.

கொழும்பிலிருந்து திருகோணமலை கடற்படைத் தலைமையகத்திற்கு அந்த வாகனம் சென்றது. சேதமடைந்த பொதுமக்களின் வாகனமானது கிறிஸ்தவ சபைக்குச் சொந்தமானது.

மாகாணக் கல்வியமைச்சு அலுவலகம் முன்பாக கடற்படை வாகனத் தொடரணிக்கு வழிவிட்டு நிறுத்தப்பட்டிருந்தது. ஆனால் அதிவேகத்தில் வந்த கடற்படையினரின் வாகனம் நிறுத்தப்பட்டிருந்த பொதுமக்கள் வாகனம்மீது மோதியது.

இதில் பொதுமக்களின் வாகனம் பாரிய சேதம் அடைந்தது. வாகனத்திலிருந்த 7 பேர் படுகாயமடைந்தனர். காயமடைந்த அனைவரும் திருகோணமலை பொது மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இலங்கையரைத் திருமணம் செய்து கொண்ட வெளிநாட்டுப் பெண் உட்பட மூவர் கொழும்புத் தேசிய மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

அவர்களது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

# இரவுநேர அம்புலன்ஸ் சேவை

(யாழ்ப்பாணம்)

இரவு நேர அம்புலன்ஸ் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டின் ஆரம்ப கால பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட இரவு நேர நோயாளர் அம்புலன்ஸ் சேவை, அம்புலன்ஸ் சாரதி மற்றும் பணியாளர்களின் பாதுகாப்பு சம்பந்தமான பிரச்சினைகள் காரணமாக தற்காலிகமாக இடைநிறுத் தப்பட்டிருந்தது.

பொதுமக்கள் மற்றும் பல்வேறு பொது அமைப்புக்களினால் விடுக்கப்பட்ட கோரிக்கையை கருத்தில் கொண்டு தற்போது பாதுகாப்புப் படைத்தரப்பின் அனுமதியுடன் இச் சேவை மீள ஆரம்பிக்கப்படுகின்றது.

எனவே கடும் சுகவீனமுற்ற நோயாளர்களை இரவு நேரத்தில் வீட்டிலிருந்து அண்மையிலுள்ள வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கு எமது வைத்தியசாலையின் அம்புலன்ஸ் வாகனத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

கீழே தரப்பட்ட தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தமக்கு அண்மையிலுள்ள வைத்தியசாலையின் சேவையினைப் பெறலாம் என்பதுடன் யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் இச் சேவை தேவைப்படின் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் 222 2561, 222 9792 தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம்.

மாவட்ட வைத்தியசாலை வல்வெட்டித்துறை-226 3530, மாவட்ட வைத்தியசாலை சாவகச்சேரி -222 8479, சுற்றயல்கூறு சங்கானை-222 5477, மாவட்ட வைத்தியசாலை தெல்லிப்பழை-060 221 2614, மாவட்ட வைத்தியசாலை ஊர்காவல்துறை - 060 221 2660, சுற்றயல்கூறு காரைநகர் 222 5556, கிராமிய வைத்தியசாலை வட்டுக்கோட்டை-060 221 3582, ஆதாரவைத்தியசாலை பருத்தித்துறை-226 3261, 226 3262, கிராமிய வைத்தியசாலை மருதங்கேணி-060 221 3580, கிராமிய வைத்தியசாலை வேலணை-060 221 3570, சுற்றயல்கூறு அச்சுவேலி-226 3152. (ச)

# மைத்திரிபால சிறிசேனவை கொல்வதற்கு தற்கொலைதாரி

## பாராளுமன்றில் அவரே தெரிவிப்பு

தன்னைக் கொல்வதற்காக விடுதலைப் புலிகள் தற்கொலைதாரியை அனுப்பியுள்ளதாக அமைச்சர் மைத்திரிபால சிறி சேன கூறியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் வடக்கு-கிழக்கு நிலைமைகள் தொடர்பான விவாதத்தின் போது மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுதங்களை கீழே போட்டு விட்டுத் தேர்தலின் மூலம் தங்களது பலத்தை வெளிப்படுத்த வேண்டும். அதிகாரப் பகிர்வுக்கான செயற்பாட்டிற்கு அனைத்துக் கட்சியினரது ஆதரவு அவசியமானது.

அமைதி முயற்சிளை முன்னெடுக்க சர்வதேச சமூகத்தினது ஆதரவை மகிந்த ராஜபக்ஷ பெற்றுள்ளார். உள்நாட்டிலும் அத்தகைய ஆதரவு அவசியமானது.

அதிகாரப் பகிர்வுக்கான குழுக்களை அரசாங்கம் அமைத்து வரும் நிலையில் விடுதலைப்புலிகளோ படுகொலைச் சம்பவங்களில் ஈடுபடுகின்றனர்.

என்னைக் கொல்வதற்கு விடுதலைப்புலிகளின் சார்பில் தற்கொலைதாரி ஒருவர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

அந்நபர் கைது செய்யப்பட்டபோது சயனைட் குப்பியை விழுங்கினார். இதைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் மறுக்க முடியுமா என்றார் அவர். (ச-5)

# இராணுவக் காவலரண்கள் மீது நேற்றுப் பரவலாகத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று இராணுவத்தினர்மீது பரவலாகத் தாக்குதல்கள் இடம்பெற்றன. நேற்றுக்காலை வடமராட்சி தொண்டமனாறுப் பகுதியில் அமைந்துள்ள இராணுவக் காவலரண்மீது நேற்றுக் காலை தாக்குதல் நடத்தப்பட்டது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் காவலரண்மீது கைக்குண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் இரு இராணுவத்தினர் காயமடைந்தனர். காயமடைந்த இருவரும் பலாலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை நேற்று மாலை 5.30 மணியளவில் அரசடிச் சந்தியிலுள்ள இராணுவக் காவலரண்மீது கிரனைட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதனையடுத்து இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கித் தாக்குதலில் 4 பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.

கே.வசந்(வயது-18), என்.ஞானசேகரன் (வயது-34), எஸ்.ஜசிதன்(வயது-25), எஸ்.சிவநேசலிங்கம்(வயது-58) ஆகிய நால்வருமே படுகாயமடைந்தவர்களாவர். இவர்கள் அனைவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ச-5)

# இலங்கைக்கு உதவி செய்வதற்கு பாகிஸ்தான் எப்போதும் தயார்

இலங்கைக்கு எப்போதும் உதவ தமது நாடு தயாராகவிருப்பதாக இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் பசீர் வாலி முகமெட் தெரிவித்தார்.

கண்டியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அமெரிக்காவுக்கு முன்பே பயங்கரவாதத்தை எதிர்த்து பாகிஸ்தான் போராடி வருகின்றது. இலங்கையில் பிரதேச ஒற்றுமை மற்றும் இறைமையை பாகிஸ்தான் ஏற்றுக் கொள்கிறது. அமைதியை மகிந்த ராஜபக்ஷ உருவாக்க வேண்டும்.

இலங்கையும் பாகிஸ்தானும் பரஸ்பரம் உதவிக் கொள்ளும் நாடுகள். இலங்கைக்கு எந்த உதவியையும் செய்ய பாகிஸ்தான் தயாராகவுள்ளது என்றார் பசீர் வாலி முகமெட். (ச-5)

# போதனா வைத்தியசாலையில் மக்கள் வங்கியின் சிரமதானம்

மக்கள் வங்கியின் 45-வது வருடப் பூர்த்தியை முன்னிட்டு யூலை மாத முழு நாட்களும் வாடிக்கையாளர் கவனயீர்ப்பு மாதமாக கருதப்பட்டு மேலும் சமுதாயப் பணிகளிலும் மக்கள் வங்கி ஊழியர்களை ஈடுபடுமாறு நிர்வாகம் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

இதனடிப்படையில் நாளையும் நாளை மறுதினமும் மக்கள் வங்கி ஊழியர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிறுபிள்ளைகள் சிகிச்சை வாட் சிரமதான நிகழ்வுகளில் ஈடுபடவுள்ளனர்.

குறிப்பாக அந்த வாட் முழுவதும் வர்ணம் பூசப்பட்டு அழகூட்டப்படும். இதற்காக மக்கள் வங்கி யாழ்.பிராந்தியம் ஒரு லட்சம் ரூபாவை செலவிடுவதற்கு உத்தேசித்துள்ளது. (ச-5)

# உடுவில் குடும்பஸ்தர் இராணுவத்தால் கைது

(யாழ்ப்பாணம்)

மருதனார்மடம் சந்திக்கு அண்மையில் உடுவில் வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலையடுத்து குடும்பஸ்தர் ஒருவர் இராணுவத்தால் கைது செய்யப்பட்டதாக நேற்று அவரது மனைவி யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

நவாலி வீதி மானிப்பாயை சேர்ந்த இராமசாமி செல்வராசர் (வயது-44) என்ற நடமாடும் மீன் வியாபாரி பருத்தித்துறைக்குச் சென்று விட்டு மருதனார்மடம் வரும் போது இராணுவத்தினர் கைது செய்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக இராணுவத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது அவரைத் தாம் கைது செய்யவில்லை என இராணுவத்தினர் மனித உரிமை ஆணைக்குழுவில் தெரிவித்துள்ளனர். (ச-133)

# யாழ்ப்பாணத்தில் நேற்று...

வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்குமாறு உத்தரவிட்டார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

## கொக்குவிலில்......

கொக்குவில் குளப்பிட்டியில் வைத்து குளிர்பான நிலைய உரிமையாளர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

நேற்று மாலை 6 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் கதிரையில் அமர்ந்திருந்த அவரை சுட்டுவிட்டு தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

சுட்டுக்கொல்லப்பட்டவர் சின்னத்தம்பி மங்களேஸ்வரன் என அடையாளம் காணப்பட்டார். சூட்டுச்சம்பவம் இடம் பெற்றவுடன் அவரது உடல் அயலவர்களின் உதவியுடன்

## அச்சுவேலியில்...

அச்சுவேலி தெற்கில் நேற்றிரவு 8 மணியளவில் வயோதிபர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சுட்டுக் கொல்லப்பட்டவர் ஈ.பி.டி.பியின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினரான செல்லர் யோகன் (வயது-60) எனத் தெரிவிக்கப்பட்டது.

இவர் வீட்டில் இருந்த சமயம் மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தாக தெரிவிக்கப்பட்டது. (ச-து-12,15,49,133,136)

## மன்னார்-வவுனியாவில்...

அவர்களை அழைத்துச் சென்ற வாகன ஓட்டுநரும் இக் கிளை மோர்த் தாக்குதலில் சிக்கினர்.

மன்னார் மேலதிக அரச அதிபர் சம்பவ இடத்திற்குச் சென்று பார்வையிட்டுள்ளார்.

இதேவேளை வவுனியாவில் புலிகளின் நிர்வாகப் பகுதிக்குள் இராணுவத்தினரது ஆழ ஊடுருவும் அணியினர் நடத்திய கிளைமோர்த்தாக்குதலில் தமிழீழ எல்லைப்படையைச் சேர்ந்த மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

வவுனியா சேமமடுப் பகுதியில் சுற்றுக் காவல் பணியில் எல்லைப் படையினர் ஈடுபட்டிருந்தபோது நேற்று முற்பகல் 11.45 மணியளவில் இத் தாக்குதல் நடத்தப்பட்டதாக தமிழீழக் காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

படுகாயமடைந்த மூவரில் ஒருவரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## குருநகரில்...

ஸ்தலத்திலேயே உயிரிழந்ததாகவும் இராணுவத்தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

அதே இடத்தைச்சேர்ந்த வைத்தியாம் பிள்ளை நிமலதாஸ் (வயது 20) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவரது உடலுக்கு அருகில் வெடிக்கக் கூடிய நிலையில் ஒரு கிரனைட் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து இராணுவத்தின் குண்டு செயலிழக்கும் பிரிவினர் அழைக்கப்பட்டு அது செயலிழக்கச் செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதன்பின்னர் சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ்.மாவட்ட மேலதிக நீதிபதி திருமதி சிறிநிதி நந்தசேகரன் விசாரணைகளை மேற்கொண்டதுடன் சடலத்தை போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ச-5)

## யாழ்...

சுடப்பட்டவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நாகமணி நடேஸ்வரன் எனத் தெரிவிக்கப்பட்டது. சுடப்பட்டு படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்ட வழியில் உயிரிழந்துள்ளார். இவர் கடந்த நான்கு வருடங்களாக கொட்டகேன மாவத்தையில் வசித்து வந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)






# இலங்கைப் பிரச்சினையை...

இலங்கைப் பிரச்சினையை இந்தியா உன்னிப்பாகக் கவனித்து வருகிறது. எனினும் அதில் தலையிடுவது குறித்து இன்னமும் யோசிக்கவில்லையென இந்திய வெளிவிவகாரத் துறை இணை அமைச்சர் வி.அகமது தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் தலையீடுகள் இன்றி இலங்கையில் உள்ள பிரதான இரு கட்சிகளும் இணைவதன் மூலம் பிரச்சினைக்குத்தீர்வு காண முடியும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

போர் நிறுத்த உடன்படிக்கை சமாதான நடவடிக்கைகளின் அடிப்படை என்பதனால் அதனைப் பாதுகாத்து அரசியல் தீர்வு நோக்கிய பயணத்தை விரைவுபடுத்த வேண்டும் எனவும் இந்தியா வலிறுத்தியுள்ளது.

இதேவேளை சமாதான நடவடிக்கைகளுக்கு தமது கட்சி எப்போதும் ஒத்துழைப்பு வழங்க தயாராகவிருப்பதாக ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இந்திய விஜயம் மேற்கொண்ட எதிர்க் கட்சித் தலைவருடன் ஜோன் அமரதுங்க, மிலிந்த மொறகொட ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்த விஜயத்தில் கலந்து கொண்டனர்.

இதேவேளை எதிர்க் கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க இன்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி ஆகியோரைச் சந்தித்துப் பேசவுள்ளார். (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அச்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.07.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.